வருடாந்த முன்னேற்ற அறிக்கை

2022

போக்கவாத்து மற்றும் நெடுஞ்சாலைகள்
அமைச்சு(நெடுஞ்சாலைகள் பிரிவு)

சமர்ப்பனம்

இவ் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2022 ஆனது பொது நிதிகள் சுற்றுநிறுப இலக்கம் 402 இனால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக போக்குவர்த்து மற்றும் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டதாகும்

இவ் அறிக்கையானது அமைச்சின் பெருந்தெருக்கள் பகுதியின் பௌதீக மற்றும் நிதிச்செயலாற்றுகையை காட்டுகின்றது

உள்ளக்கம

அத்தியாயம் 1 –அமைச்சு விபரம்

1.1	அறிமுகம	01
1.2	தூரநோக்கு,பணிக்கூற்று	04
1.3	பிரதாண தொழிற்பாடுகள்	06
1.4.1	அமைச்சின பெருந்தெருக்கள் பிரிவின் நிறுவக கட்டமைப்பு	07
1.4.2	கிராமிய வீதிகள் பிரிவின் நிறுவக கட்டமைப்பு	08
1.5	நெடுஞ்சாலைகள் துறை கண்ணோடுட்டம்	09
1.5.1	அமைச்சின் தொழிற்பாட்டு பிரிவுகள்	09
1.6	ஏனைய் நிறுவனங்கள்	21
1.7	நெடுஞ்சாலைத்துறையில் முதலீடுகள்	22

அத்தியாயம் 2 செயலாற்றுகை மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

பாகம் 1 வெளிநாட்டு நிதியீட்ட திட்டங்களின் செயலாற்றுகை

2.1	**புதிய முயற்சிகள்**	25
2.1.1	கண்டி பல்ஊடக போக்குவர்த்து மைய அபிவிருத்தி திட்ட்ம்	25
2.1.2	தேசிய போக்குவர்த்து தரவுத்தளத்தை மேம்படுத்தல் மற்றம் வான்மை அபிவிருத்தி திட்டம்	25
2.2	**அதி வேக நெடுஞ்சாலை அபிவிருத்தி**	
2.2.1	அதிவேகப் பாதைகளின் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம	27
2.2.2	மத்திய அதிவேக நெடுஞ்சாலை	29
2.2.3	புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையிலான மேல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை	32
2.2.4	துறைமுக நுழைவு மேல் உயர்த்தப்பட்ட வான்வெளி நெடுஞ்சாலை	33
2.2.5	ருவன்புற அதிவேகப் பாதை	34
	அதிவேக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுக்கொன்டிருக்கும் திட்டங்களின் 2021 ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின்படி பௌதீக முன்னேற்றம்	36
2.3	**நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி**	39
2.3.1	தேசிய நெடுஞ்சாலைகள் வலயமைப்பு	39
2.3.2	வீதிகளையும் பாலங்களையும் பராமரித்தல்	40
2.3.3	வலயமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு	41
2.3.4	வாகன போக்குவரத்து முகாமை	42
2.3.5	பேராதெனிய – செங்கலடி – பதுளை வீதி புனரமைப்பு (ஏ 5) திட்டம்	43
2.3.6	வீதி வலயமைப்பு அபிவிருத்தி - அபிவிருத்திக்கான சவூதி நிதி	44
2.3.7	வீதி வலயமைப்பு அபிவிருத்தி கருத்திட்டம்	45
2.3.8	கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி கருத்திட்டம	46
2.3.9	தெற்கு வீதித் தொடர்பு கருத்திட்டம்	48
2.3.10	ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ ரோட் - கட்டம் 1)	49
2.3.11	இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி முதலீட்டுத் திட்டம் (ஐரோட் 2)	50
2.3.12	அரசாங்க உத்தரவாதத்தின் கீழான உள்ளூர் வங்கிக் கடன்கள் மூலமான வீதி புணரமைப்பு கருத்திட்டங்கள	52
2.3.13	போக்குவரத்து தொடர்பு மற்றும் சொத்து முகாமைத்துவ கருத்திட்டம்	52

2.3.14	பேஸ்லைன் வீதி நீடித்தல் திட்டம் கட்டம் III	53
2.3.15	மேல்மாகாண தேசிய நெடுஞ்சாலைகள் கருத்திட்டம	54
2.3.16	மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள வீதிகளின் மற்றும் பாலங்களை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் திட்டம	55
2.3.17	போக்குவரத்து கருத்திட்டங்களை தயார்படுத்துவதற்கான வசதியளித்தலுக்கான திட்டம்	56
2.3.18	கடற்கரையோர வீதி பானந்துறை வரை விஸ்தரித்தல	57
2.3.19	வீதி வலையமைப்பில் 100,000 கி.மீ வீதிகளை அபிவிருத்தி செய்தல்	58
2.3.20	காலி – தெனியாய – மாதம்பே வீதியின் 78+000கி.மீ - 130+600 கி.மீ (சூரியக்கந்தையிலிருந்து - இரக்வானை வரை)	64
2.3.21	கண்டி சுரங்கப்பாதை நிர்மாணம்	64
2.3.22	உலக வங்கியின் நிதி உதவியின் கீழான தொடர்பு மற்றும் வீதி அபிவிருத்தி திட்டம்	65
	நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் 2021ஆம் ஆண்டுக்கான இலக்குகளுக்கு எதிரான முன்னேற்ற அடைவுகளின் சாராம்சம்.	67
	நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றத்தின் சுருக்கம்	
2.4	**வீதிகளை விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்**	73
2.4.1	வீதிகளை அகலமாக்கி அபிவிருத்தி செய்தல்	73
2.5	**பாலங்கள் மற்றும் வான்வழிப் பாலங்கள்**	77
2.5.1	தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சேதமடைந்த மற்றும் பலவீனமான பாலங்களை புனரமைத்தல்	77
2.5.2	தேசிய நெடுஞ்சாலைகளில் 25 பாலங்களை புனர் நிர்மாணம் செய்தல்	78
2.5.3	இரண்டாவது புதிய களனிப் பாலம்	80
2.5.4	பாலங்கள் பராமரிப்பு முறைமை மற்றும் பாலங்கள் மதிப்பீட்டு அலகின் உருவாக்கம	81
2.5.5	கோஹுவலை மற்றும் கட்டம்பை ஆகிய இடங்களில் வான் வழிப் பாலங்களை அமைத்தல	82
2.5.6	கொம்பனி வீதியில் 03 மேம்பாலங்களை நிர்மாணித்தல்	84
	பாலங்கள் மற்றும் வான்வழிப் பாதைகளின் நிர்மாணப் பணிகளின் மற்றும் பௌதீக முன்னேற்றமும் - 2021	86
2.7	**நிதிச் செயலாற்றுகை மீளாய்வு**	90
2.7.1	செயற்பாட்டு நடவடிக்கைகள்	90
2.7.2	அபிவிருத்தி நடவடிக்கைகள்	92
2.8	**முன்னோக்கிய பாதை**	101
2.8.1	நிர்மாணத்துறையில் மூலப்பொருள் மற்றும் வெடிபொருள் பற்றாக்குறையின் தாக்கம் மற்றும் எதிர்காலம்.	102

அத்தியாயம் 3 -முழுமையான நிதிச் செயலாற்றுகை

3.1	நிதிச் செயலாற்றுகை அறிக்கை	103
3.3	நிதி நிலைமைக் கூற்று	105
3.4	காசுப் பாய்ச்சல் கூற்று	106
3.5	நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்	108
3.6	வருமான சேகரிப்பின் செயலாற்றுகை	123

3.7	நிதி ஒதுக்கங்களின் பயன்பாட்டுச் செயலரற்றுகை	123
3.7	ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராண்மைகளாக திணைக்களங்கள் /மாவட்ட செயலகங்கள் /மாகாண சபைகளுக்கான செலவுகளுக்கான நிநி ஒழுங்கு விதி 208 அமைய கொடைகள	123
3.8	நிதியல்லா சொத்துக்களின் செயலாற்றுகை	124
3.9	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	124
அத்தியாயம் 4 - செயலாற்றுகை குறிகாட்டிகள்		
	அறிமுகம்	125
4.1	அமைச்சின் செயல்திறன் குறிகாட்டிகளின் முன்னேற்றம்	125
அத்தியாயம் 5 – நிலைபேறு அபிவிருத்தி இலக்குகளின் செயலாற்றுகை		
5.1	நிலைபேறு அபிவிருத்தி இலக்குகளில் அடையப்பெற்ற செயலாற்றுகை	127
5.2	வீதத் துறையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் அடைவு மற்றும் சவால்கள்	128
அத்தியாயம் 6 - மனித வளம்		
6.1	பதவியாளணி முகாமை	131
6.2	அமைச்சின் செயலாற்றுகையில் மனித வளத்தின் தாக்கம்	131
6.3	மனிதவள அபிவிருத்தி	132
அத்தியாயம் 7 - இணக்க அறிக்கை		133
புகைப்படத் தொகுப்பு		I – IV

பின் இணைப்புக்கள்		
பின் இணைப்பு 01	2022 - இல் அளிக்கப்பட்டள்ள வீதி நிாமாண ஒப்பந்தங்கள்	V
பின் இணைப்பு 02	அதிவேகப் பாதை வலயமைப்பின் வரைபடம்	VII
பின் இணைப்பு 03	வாகனங்களின் எண்ணிக்கைமற்றம் கட்டணவருமானம்	VIII
பின் இணைப்பு 04	மத்தியஅதிவேகப் பாதையின் அமைவிடவரைபடம்	XII
பின் இணைப்பு 05	ருவன்புர நெடுஞ்சாலையின் அமைவிட வரைபடம்	XVI
பின் இணைப்பு 06	பூரணப்படுத்தப்பட்டமற்றும் நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நெடுஞ்சாலைகள	XVII
பின் இணைப்பு 07	பதுளைசெங்கலடிவீதிமேம்படுத்தல் திட்டத்தின் இரண்டாம் ஐஇன் கீழ் மேம்படுத்தவதற்குதெரிவுசெய்யப்பட்டுள்ளவீதிப்பகுதிகள்	XVIII
பின் இணைப்பு 08	கொழும்புமாவட்டவீதிஅபிவிருத்திகருத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்வதற்குதெரிவுசெய்யப்பட்டுள்ளவீதிகள்	XIX
பின் இணைப்பு 09	தெற்குவீதிதொடர்புதிட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்டவீதிகள	XX
பின் இணைப்பு 10	ஒருங்கிணைந்தவிதிமுதலீட்டுநிகழ்ச்சித்திட்டபராமரிப்பின் கீழ் தேசியவீதிஒப்பந்தங்களின் முன்னேற்றம் - கட்டம் ஐ	XXI
பின் இணைப்பு 11	100இ000 கி.மீவீதிஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டத்தின் மாகாணஅடிப்படையிலானசாராம்சம்	XXIV
பின் இணைப்பு 12	கண்டிசுரங்கப்பாதையின் அமைவிடவரைபடம	XXVII
பின் இணைப்பு 13	அனைத்தையும் உள்வாங்கியவிதித்தொடர்புகருத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளவிதிகள் .்.பாலங்கள் (Component 01)	XXVIII
பின் இணைப்பு 14	தேசியபெருந்தெருக்களில் 25 பாலங்களைபுனரமைத்தல் - நறைவுசெய்யப்பட்டபாலங்கள் - Package 01	XXX

அத்தியாயம் 1

அமைச்சுவிபரம்

1.1 அறிமுகம்

வீதி வலைப்பின்னலானது நாட்டில் காணப்படும் மிகவும் பெறுமதிமிக்க மற்றும் பாரிய சமூக சொத்தாகும். இது நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சூழல் நலன்களுக்கு அடிப்படையாக காணப்படுகின்றது. இலங்கையானது 65,610 சதுர கி.மீ. பரப்பளவில் 22.15 மில்லியன் (இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2021) சனத்தொகையைக் கொண்ட நாடாகும். இலங்கையானது 1.76 கி.மீ. வீதி அடர்த்தியைக் கொண்டுள்ளதுடன் ஏனைய பல தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையானது அதிக வீதி அடர்த்தியைக் கொண்ட நாடாகும். இலங்கையில் வீதிப் போக்குவரத்தானது பிரதான போக்குவரத்து மூலமாகும். புகையிரத போக்குவரத்துடன் ஒப்பிடுகையில் இது தொழில்நுட்ப மற்றும் பொருளாதார நலன்களைக் கொண்டதாகும். தற்போதைய சூழ்நிலையில் 94 சதவீதமான பிரயாணிகள் மற்றும் 98 சதவீதமான சரக்கும் வீதி போக்குவரத்தினூடாகவே இடம்பெறுகின்றன. வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதிப் பராமரிப்பு நம்பிக்கை நிதியம், மகநெகும நிர்மாணக் கம்பனி, மகநெகும உசாத்துணை கம்பனி, மகநெகும இமெல்சன் கம்பனி மற்றும் அதிவேக போக்குவரத்து கம்பனி (தனியார்) ஆகியன வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் வரும் பிரதான அரச நிறுவனங்களாகும். இவற்றில் வீதி அபிவிருத்தி அதிகார சபையானது 1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்ட ரீதியான நிறுவனமாகும். இது 1986ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைகள் திணைக்களத்திற்கு மாற்றீடாக உருவாக்கப்பட்டதாகும். வீதி அபிவிருத்தி அதிகார சபையானது நாட்டின் முதன்மையான வீதி அபிவிருத்தி நிறுவனமென்றவகையில் 2022 ஆம் ஆண்டின் முடிவில் அதிகார சபையானது அண்ணளவாக 12,536 கி.மீ. வீதிகளை பராமரித்துவந்தது. அது 2022ஆம் ஆண்டின் முடிவில் ஏ தர வீதிகள் 4,217 கி.மீ. பி தர வீதிகள் 8007 கி.மீ. அதிவேகப் பாதைகள் 312 கி.மீ. மற்றும் 3 மீற்றர்களைவிட விரிவான 4254 பாலங்களையும் கொண்டதாகும்.

கிராம நகர இடைவெளியினை குறைக்கும் வகையில் சமூகத்தின் அனைத்து மட்டத்தினருக்கும் சமமான சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக "திறனான மற்றும் சூழல் நட்பான பொதுப் போக்குவர்த்து முறைமையொன்றிற்கு அவசியமான போக்குவர்த்து வலையமைப்பை அபிவிருத்தி செய்தல்அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டலின் ஒரு பிரதான கூறாகும். ஆகவே போக்குவர்த்து மற்றம் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பெருந்தெருக்கள் பகுதியானதுநாட்டின் தரைப் போக்குவர்த்து துறைய அபிவிருத்தியின் முக்கியமான நிறுவனம் என்ற வகையில் அனைத்து வீதி வலயமைப்புக்களும் பூரணப்படுத்தப்பட்டு மற்றும் உரிய பொருளாதார மையங்கள் தொடர்புபடுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் தனது திட்டங்களையும் மற்றும் உபாயங்களையும் வகுப்பதற்கு கடமைப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் புதிய கொள்கைகள் மற்றும் உபாயங்களைப் பின்பற்றி தேசிய மற்றும் மாகாண வீதிகள் உள்ளடங்களாக நாட்டின் வீதி வலயமைப்பை மேம்படுத்துவதற்கு அதி முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அது இலங்கை மக்களின் வளமான முன்னோக்கிய

எதிர்காலத்திற்கான பெருமளவில் பங்களிப்புக்களை வழங்கியுள்ளது.

பாதுகாப்பான வீதி வலயமைப்பை உறுதிசெய்வதன் மூலம உயர்தரத்திலான போக்குவர்த்து, பிரவேசம் மற்றும் மேம்படுத்தப்பட்ட இணைப்பு மூலம் பொருத்தமான நகர – கிராமிய இணைப்பினை அபிவிருத்தி செய்து நாட்டின் அகிவிருத்தியிற்கு பங்களிப்புச் செய்வதே வீதி அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் குறிக்கோலாகும். இதுவரை அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையில் காணப்படும் பிராந்தியங்களின் பயன்படுத்தப்படாத பொருளாதார சாத்தியங்களுக்கான வழிவகைகளைத் திறப்பதற்கு உதவுவதோடு விருத்தியடைந்த நகரங்களின மீதான தாக்கத்தை குறைத்து நாட்டின் நகரங்களுக்கிடையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் வழிவகுக்கும்.

அனைத்து போக்குவர்த்து மூலங்களுக்கிடையில் வீதிப்போக்குவர்த்தானது நாட்டின் போக்குவர்த்து துறையின் பிரதான முதுகெழும்பாகக் உள்ளது. நாட்டின் வாகனப் போக்குவர்த்தில் 80% தேசிய வீதிகளினூடாகவே இடம்பெருகின்றன. ஆகவே, தேசிய நெடுஞ்சாலைகளானது உரிய தரத்தில் மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும். நெடுஞ்சாலைகள் அபிவிருத்தியில் தனியார்த்துறையின் முதலீடுகளானது மிகவும் குறைச்த மட்டத்தில் காணப்படுவதனால் அரசாங்கமானது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மூலங்களில் இருந்து திரட்டி அதன் வருடாந்த வரவு நெலவுத்தரிட்டத்தினூடாக நிதியீட்டம் செய்யப்படவேண்டியள்ளது.

போக்குவர்த்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பெருந்தெருக்கள் பிரிவே இலங்கையில் வீதி அபிவிருத்தி துறையின் அதி உயர் அரச நிறுமாக விளங்குகின்றது. இலங்கை நாட்டு மக்களுக்கு சமூக பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்ளக்கூடிய வகையில உயர் தரத்திலான போக்வர்த்தது, மேம்படுத்தப்பட்ட வீதித் தொடாபு மற்றும் சகல இடங்களுக்குமான பிரவேசததையும் உறுதிப்படுத்தும் வகையில் வீதித்துறை தேசிய கொள்கைகளை உருவாக்குதல் உபாயங்களை அமுல்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றுகையை கண்காணித்தல் மற்றும் தேசிய வீதிகளை மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இதன் கடப்பாடாகும். வீதி அபிவிருத்தி அதிகார சபையானது அமைச்சின் கீழ் வரும் பிரதான அமுலாக்கல் முகவர் என்றவகையில் வீதி அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் அதிவேநெடுஞ்சாலைகள், பெருந்தெருக்கள் மற்றும் பாலங்களைப் பராமரித்தலில் முக்கிய பங்காற்றுகின்றது.

வீதி வலையமைப்பானது பரவலாகக் காணப்பட்டாலும் பெரும்பாலான தேசிய மற்றும் மாகாண வீதிகளானது 50 வருடங்களுக்கு முனபு அக்கால வாகனங்களின் எண்ணிக்கைக்கும் வகைகளுக்கும் பொருத்தமாகவே நிர்மாணிக்கப்பட்டுள்ள அதேவேலை கடந்த தசாப்தங்களில் கிராமிய வீதிகளின் அபிவீருத்தியானது முக்கியத்துவமற்ற ஒரு விடயமாகவே காணப்பட்டடுள்ளது.

எவ்வாறாயினும் நாம் பல்லாயிரக்கணக்கான கி.மீ நீளமான வீதிகளை கடந்த பல

வருடகாலமாக நிர்மாணித்தாலும், , இன்னும் பூரணப்படுத்தப்படாத வீதிகளின் நிர்மாணிப்பதில் கூடிய கவனம் செலுத்துவதோடு நிர்மாணிக்கப்படட வீதிகளை தொடர்ந்து பராமரிப்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. கடந்த இரு தசாப்தங்களில் மோட்டார் வாகணங்கள் மற்றும் கணரக வாகனங்களின் பாவனையும் துரிதமாக அதிகரித்துள்ளது. தொழிநுட்ப முன்னேற்றத்தின் காரணமாக துரித வேகம் கொண்ட நவீன வாகனங்களின் அதிகரித்த பயன்பாடானது நகரங்களில் மற்றுமல்லாது கிராமங்களிலும் பாதுகாப்பான மற்றும் வேகமான நகர்வுக்கு அவசியமான வீதிகளின் வடிவமைப்பை வேண்டிநிற்கின்றது.

அசசாங்கமானது மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு நாட்டின் வீதிக்கட்டமைப்பை துரிதமாக மேம்படுத்தும் முகமாக அவசியமான வளங்களை பெற்றுக்கொடுத்துள்ளது.
இம்மேம்படுத்தல்களானது உகந்த வடிவமைப்பைக் கொண்ட, சிறப்பான வீதித் தொடரர்புடன் கூடிய மற்றும் குறைந்த செலவில் பராமரிக்கக்கூடிய வீதிக்கட்டமைப்பினை நாட்டிற்கு பெற்றுக்கொடுக்கும்.

2022 இல் நிர்மாணக் கைத்தொழில் துறையின் ஏனைய உபதுறைகளைப் போன்று வீதித்துறை கருத்திட்டங்களின் அமுல்படுத்தல்களும் பாதிப்படைந்தது. எவ்வாறயினும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களானது, பௌதீகரீதியாகவும் மற்றும் நிதி ரீதியாகவும் குறைந்தளவிலான பாதிப்புக்களுடன் செயலாற்றியுள்ளது.

1.2 தூரநோக்கு பணிக்கூற்று குறிக்கோள்கள

1.2.1 தூரநோக்கு

“உலக தரத்திலான வீதி உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல்,திறனாகாப் பராமரித்தல்மற்றும் பாதுகாப்பானதுமான உயர் சேவைகளை வழய்குனராகக் காணப்படல் ”

1.2.2 பணிக்கூற்று

“நாட்டின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பிரஜைகளின் தேவைகளுக்கு ஏற்ப காணப்படும் நிபுணத்துவ அறிவு, நவீன தொழிநுட்பம் மற்றும் வளங்களை உகந்த வகையில் பயன்படுத்தி பெருந்தெருக்கள் வலையமைப்பை அபிவிருத்தி செய்து பராமரித்து முகாமை செய்தல் ”

1.2.3 குறிக்கோள்கள்

- தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நெடுஞ்சாலை துறைகளுக்கான தேசிய கொள்கைகளை வகுத்தல்

- நகரங்களுக்கிடையில் உயர் போக்குவரத்து வசதி, பொருளாதார மையங்களுக்கிடையில் திறனான தொடர்பு மற்றும் கிராமிய பிரதேசங்களுடனான தொடர்புகளை மேம்படுத்தல்.

- நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் வீதி வலையமைப்பினை சிறந்த தரத்தில் பராமரித்தல்.

- வினைத்திறனான போக்குவரத்து முகாமைத்துவத்திற்கு அவசியமான நுண்ணறிவு போக்குவர்து முறைமையை (ITS) பெற்றுக் கொடுத்தல்.

- பயனாளர் நட்பான வசதிகள் மற்றும் உயர் தரமான வீதிச் சேவையினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் வீதித்துறையின் வாண்மை அபிவிருத்தியில் முதலீடு செய்தல்.


- வீதித்துறையின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு ஆராய்ச்சி அபிவிருத்தியில் முதலீடு செய்தல்

- வீதிப்பாவணையாளர்களினை கருத்திற்கொண்டு வீதிப்பதுகாப்பினை மேம்படுத்தல்


1.3 பிரதான செயற்பாடுகள்

1. வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள் தொடர்பான மற்றும் அதனுடன் தொடர்புபட்ட திணைக்களங்கள் மற்றும் சட்டவாக்க நிறுவனங்களை (வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகள் மற்றும் வீதிப் பராமரிப்பு நம்பிக்கை நிதி) மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் மற்றும் 1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை உட்பட அமைச்சின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்கள் தொடர்புகாவும் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தயாரித்தல், அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.
2. பிரஜைகளை மையப்படுத்திய சமூக பொருளாதார அபிவிருத்தியை விருத்தி செய்யும் வகையில் தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தி தரத்தை உயர்த்துதல். இதன் மூலம் கிராமிய நகரமயமாக்கலானது விரிவுபடுத்தப்படுவதோடு கிராமங்கள் நகரங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது.
3. அதிவேக பாதை பாவனையாளர் கட்டணங்களை தீர்மானித்தல், சேகரித்தல் மற்றும் கண்காணித்தல்.
4. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அறிவுறுத்தல்களின் கீழ் உள்ள வீதிக் கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்யும் முகமாக அரசாங்க கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல். அதேபோல் அத்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.
5. மேற் கூறப்பட்ட நிறுவனங்களையும் அந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடயப்பரப்புக்களையும் மேற்பார்வை செய்தல்..

1.4.1 நிறுவனஅமைப்புவிளக்கப்படம–வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு



1.4.2 கிராமிய வீதிகள் பிரிவின் நிறுவக கட்டமைப்பு



1.5 நெடுஞ்சாலைகள் துறை

1.5.1 அமைச்சின் செயற்பாட்டு பிரிவுகள்

போக்குவர்த்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பெருந்தெருக்கள் பிரிவானது செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் 8 செயற்பாட்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு 8 பகுதித் தலைவர்களின் கீழ் பின்வருமாறு காணப்படுகின்றது.



அரசாங்கமானது 09.08.2020 திகதி வெளியிடப்பட்ட 218/27 வர்த்மானி அறிவித்தலினூடாக கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சு ஒன்றை உருவாக்கியது. 2022.10.14 திகதி வெளியிடப்பட்ட 2301/59 வர்த்மானி அறிவித்தலினூடாககிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சானது கலைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் போதக்வர்த்த மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கிராமிய வீதி அபிவிருத்தி பிரிவானது உருவாக்கப்பட்டு அதன் கீழ கொண்டுவாப்பட்டது.

ஒரு விரிவான தூரநோக்கம் மற்றும் இலக்குகளோடு நெடுங்சாலைகள் அமைச்சின் கொள்கை வளிகாட்டல்களுடன் கிராமிய விதிகள் மற்றும் பாலங்கள் அபிவிருத்தி திட்டமானது அமுல்படுத்தப்படகின்றது.இவ் இலக்குகளை அடையும் நோக்கில் கிராமிய வீதிகள் பிரிவானது பிரதானமாக கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு கருத்திட்டங்களை திட்டமிடல் அமுல்படுத்தல் கண்காணித்தல் மற்றும் மிளாய்வு செய்தல் என்பவற்றில் கவனம் செலுத்தும்.

1.5.1.1 நிருவாகப் பிரிவு

போக்குவர்த்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பெருந்தெரக்கள் பபுகுதியின் நிருவாகப் பிரிவானது மேலதிக செயலாளர் (நிருவாகம்) தலைமையில் இயங்குகின்றது. இப்பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள நிறைவேற்றுத்தர அதிகாரிகளான சிரேஷ்ட்ட உதவிச் செயலாளர், உதவிச் செயலாளர் சட்ட அதிகாரி மற்றும் நிருவாக உத்தியோகத்தர், இதற்கு மேலதிகமாக கருத்திட்ட முகாமை பிரிவும் இம் மேலதிக செயலாளரின் (நிருவாகம்) நேரடி கண்காணிப்பில் கீம் கொண்டுவரப்பட்டுள்ளது. . இப்பிரிவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பணிப்பாளர (கருத்திட்ட முகாமை) மற்றும் உதவிச் செயலாளரகள் (கருத்திட்ட முகாமை) காணப்படுகின்றனர். இப்பிரிவானது அமைச்சின் அனைத்து நிருவாக நடவடிக்கைளையும் கவனிப்பதோடு ஏனைய அனைத்து பிரிவுகளும் தமது செயற்பாடுகளை

சிறப்பாக மேற்கொள்வதற்கு அவசியமான பௌதீக சூழலையும் உருவாக்குகின்றது.

2022ஆம் ஆண்டின் மீளாய்வு

1. பொது மக்களுக்கு சரியான மற்றும் உரிய காலத்தில் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு தகவல் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இத்தகவல்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் அவர் பொறுப்பாகவுள்ளார். தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டின் வினைத்திறனானது மேலதிக செயலாளருக்கு கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகளுடன் ஒப்பிடப்பட்டு முன்னேற்றமானது மீளாய்வு செய்யப்படுகின்றது.
2. தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் அமைச்சின் செயற்பாடுகளை சரியாகவும் மற்றும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அமைச்சின் கீழுள்ள பிரிவுகளானது வருடாந்த இலக்குகளுக்கு உட்பட்டவாறு தனக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை பூரணப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்கியது.
3. நிருவாகப் பிரிவானது அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் வருட முழுவதும் சிறப்பான மற்றும் தொடர்ச்சியான ஒழுங்கினைப்பை பராமரித்து தமது நடவடிக்கைகளை சிறப்பான முறையில் பூரணப்படுத்தியுள்ளது.

1.5.1.2 பெறுகைப்பிரிவு

முன்னைய தேசிய கொள்வனவு முகவராண்மையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அமைச்சின் கொள்வனவுப் பிரிவானது உருவாக்கப்பட்டது. அமைச்சு மற்றும் அமைச்சரவை நிதி அதிகார எல்லைக்குட்பட்ட கொள்வனவுகளுடன் தொடர்புபட்ட அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்புச் செய்யும் செயற்பாட்டினை மேற்கொள்கின்றது. அமைச்சின் கருத்திட்ட செயற்படுத்தல் நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபையானது ஒவ்வொரு கருத்திட்டத்திற்குமாக பல கருத்திட்ட முகாமை அலகினை உருவாக்கியுள்ளது. இக்கருத்திட்ட முகாமை அலகுகளானது தமது வருடாந்த கொள்வனவு திட்டத்தினை தயாரித்து அமைச்சின் கொள்வனவுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கின்றது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளக திட்டங்கள் உள்ளடங்கலாக அவ்வாறான அனைத்து கொள்வனவுத் திட்டங்களையும் ஒன்று சேர்த்து அமைச்சிற்கான பிரதான கொள்வனவுத் திட்டத்தை தயாரிக்கின்றது.

இப்பிரிவானது அமைச்சின் பிரதான கொள்வனவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக திறைசேரி ஏனைய அமைச்சுக்கள், தேசிய கொள்வனவு ஆணைக்குழு மற்றும் கொள்வனவு மேன்முறையீட்டு சபை போன்ற உரிய ஆர்வலர்களையும் ஒருங்கிணைப்பதில் வசதியளிக்கின்றது. இப்பிரிவின் மனித வளமானது ஒரு நிபுணத்துவ கொள்வனவாளர், உதவிக் கொள்வனவாளர், மூன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு காரியாலய உதவியாளரையும் உள்ளடக்கியதாகும்.

பிரதான கொள்வனவுத் திட்டமானது அமைச்சரவை மற்றும் அமைச்சு மட்டத்திலான அனைத்து கொள்வனவுத் திட்டங்களின் பட்டியலையும் உள்ளடக்கியுள்ளதோடு மற்றும் 2021 ஆம் ஆண்டில் 27 கொள்வனவுகளுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. (இணைப்பு01)

பிரச்சினைகள் மற்றும் சவால்கள்

அமைச்சின் கொள்வனவுத் திட்டத்தினை அமுல்படுத்தும் போது பின்வரும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் அடையாளம் காணப்பட்டன.

(அ) ஆரம்பகட்ட வடிவமைப்பின் அடிப்படையில் (BOQ) அளவுகளுக்கான விலைப்பட்டியல் தயாரிக்கப்படுவதனால் துல்லியமான கிரயம் உருதிப்படுத்தப்படாமையினால் கருத்திட்டங்களின் முடிவில் கிரயமாது எதிர்பாராத வகையில் அதிகரிக்கின்றது.

(ஆ) கொள்ளளவு மீளாய்வு குழுவானது நியமிப்பதற்கு முன்பு கொள்வனவு தயார்படுத்தல் நடவடிக்கைகளான வடிவமைப்பு,BOQ தயாரித்தல், காணி சுவீகரிப்பு மற்றும் சூழல் ஆய்வுகள் பூரணப்படுத்தப்படாமை

(இ) கருத்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு கருத்திட்டத்தின் விடயப்பரப்பில் மாற்றம் மற்றும் முற்றிலும் புதியதொரு நடவடிக்கை கொள்வனவுத் திட்டத்திற்குள் உள்வாங்குதல்

(ஈ) கொள்வனவு தொடர்பான அதிகாரிகளின் அறிவு மட்டத்தில் காணப்படும் குறைபாடுகள்

(உ) கொள்வனவு பத்திரங்கள் விவரக் குறிப்பு என்பவற்றில் காணப்படும் குறைபாடுகள் செயற்பாட்டில் காலதாமதத்தை ஏற்படுத்துவதனால் கொள்வனவு கால அட்டவணையின் அடிப்படையின்படி செயற்பட முடியாதுள்ளது.

1.5.1.3 நிதிப் பிரிவு

நிதிப் பிரிவானது போக்குவர்த்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் பெருஐந.தெருக்கள் பகுதியின் வரவு செலவுத்திட்ட ஒதுக்கத்தினை கையாளுதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தலுக்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. அரசாங்கத்திற்கு உயர் நலனைப் பெற்றுத்தரக்கூடிய வகையில் ஒதுக்கத்தை, கட்டு நிதியை மற்றும் செலவுகளை வினைத்திறனாகும் செயற்திறனாகவும் முகாமை செய்வது இப்பிரிவின் பிரதான செயற்பாடாக குறிப்பிடலாம். இச் செயற்பாடுகளுள் நெடுஞ்சாலைகள் துறையினுள் காணப்படும் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் காணப்படும் அனைத்து கருத்திட்டங்களுக்குமான கட்டு நிதியினை பெற்றுக் கொடுப்பதற்காக திறைசேரியுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றமை முக்கியமானதாகும்.

இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு அலகுகளினதும் நிதியியல் செயலாற்றுகையானது மிகவும் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் ஏனைய அலுவலக விதிகளுக்கு கட்டுப்பட்ட கணக்கறிக்கைகளை தயாரிப்பதை உறுதி செய்தல். இதற்கு

மேலதிகமாக இப்பிரிவானது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை மீளாய்வு செய்தல் மற்றும் அரச கணக்குகளுக்கான தெரிவுக்குழு(COPA & COPE) மற்றும் அரச தொழில் முயற்சிகளுக்கான தெரிவுக்குழு உள்ளடங்களாக உரிய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அனைத்து அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் மற்றும் அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்துமம் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

1.5.14 காணிப் பிரிவு

போக்குவர்த்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பெருந்தெரக்கள் பகுதியின் காணிப்பிரிவானது புதிதாக விரிவாக்கம் செய்யப்படும் நெடுஞ்சாலைகள் கருத்திட்டங்களுக்கு அவசியமான காணிகளை சுவீகரிப்பு செய்முறைக்கு வசதியளிப்பதோடு அனைத்து நிறுவனங்கள் மற்றும் உரிய ஆர்வலர்களுடன் சிறப்பான ஒருங்கிணைப்பினை பராமரித்து வருகின்றது.

2022ஆம் ஆண்டில் இப்பிரிவின் பங்களிப்பு

- காணி சுவீகரிப்பு சட்டத்தின் 2ஆம் பிரிவிற்கு அமைவாக காணி சுவீகரிப்பு முன்மொழிவிற்காக கௌரவ அமைச்சர் அவர்களின் சிபார்சுகளை காணி அமைச்சருக்கு சமர்ப்பித்தல். புதிய வீதி கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு, காணியை சுவீகரிப்பதற்கு வசதியளிக்கும் வகையில் காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் காணியின் வெற்று உரிமையை பெற்றுக் கொள்ளுதல்.
- காணி சுவீகரிப்பு சட்டத்திற்கு அமைவாக காணி சுவீகரிப்பு தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- காணி அமைச்சு, அரச விலை மதிப்புத் திணைக்களம், நில அளவைகள் திணைக்களம், பிரதேச செயலகங்கள், அரச அச்சகம் மற்றும் கருத்திட்ட முகாமை என்பவற்றுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்.
- காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியமர்த்தல் விசேட குழுக் கூட்டங்களை கூட்டுதல் மற்றும் குழுவின் தீர்மானங்களை தயாரித்து அதனை அறிவித்தல்
- பாராளுமன்றம், ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தினால் கோரப்படும் அறிக்கைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- பொது மக்கள் குறைகளை விசாரித்து தீர்ப்பதற்கு உதவியளித்தல்.
- வீதி நிர்மாணப் பணிகளினால் காணிகளை இழந்து பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியமர்த்துவதற்கு அவசியமான காணிகளை கொள்வனவு செய்வதற்கு காணி கொள்வனவு குழுவினூடாக உரிய ஏற்பாடுகளை செய்தல்
- காணி சுவீகரிப்புசட்டத்தின் 39(1) பிரிவின் கீழ் ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட வீதி அபிவிருத்திக்கு அவசியமற்ற காணிகளை மீள் கையளிப்பதற்கான அமைச்சரின் சிபார்சுகளை கௌரவ காணி அபிவிருத்தி அமைச்சருக்கு சமர்ப்பித்தல்
- ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட வீதி அபிவிருத்திக்கு அவசியமற்ற

காணிகளை காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விநியோகித்தல் கட்டளை பிறப்பிக்கப்பட்ட காணிகளை மீள் வழங்குவதற்காக சட்டத்தின் 50ஆம் பிரிவின் சிபார்சுகளை பெற்றுக் கொடுத்தல்.

- வீதி அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட காணிச்சுவீகரிப்பு தொடர்பாக அகொள்கைத்தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அமைச்சரவை பத்திரங்களைத் தயாரித்தல்.

வருடத்திற்கான அடைவுகள்

- காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் 43 சுவீகரிப்பு முன்மொழிவுகளை காணி அமைச்சிற்கு சமர்ப்பித்துள்ளது.
- காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் 55 சிபாரிசுகள் காணி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- காணி சுவீகரிப்பு சட்டத்தின் 39(அ) பிரிவின் கீழ் காணி மீட்புக்கான 07முன்மொழிவுகள் காணி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- காணி சுவீகரிப்பு மற்றும் மீள் குடியமர்த்தல் விசேட குழுவின் 18கூட்டங்கள் இடம்பெற்றதோடு 203 காணி துண்டுகள் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 39(அ) இன் கீழ் 09மீள் கையளிப்பு சிபார்சுகளும் மற்றும் சட்டத்தின் 50ஆம் பிரிவின் கீழ் 2 இரத்துச் செய்தல் சிபார்சுகளும் காணி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- வீதி அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான காணிகள் சுவீகரிக்கப்பட்டமையினால் பாதிப்படைந்த மக்களை மீள் குடியமர்த்துவதற்கு அவசியமான காணிகளை கொள்வனவு செய்வதற்காக 3 காணி கொள்வனவு குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன.
- காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிற்கு காணிகளை கையளிப்பது தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கலந்துறையாடல்கள் இடம்பெற்றன.
- காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியமர்த்தல் தொடர்பான ஒரு விசேட கூட்டம் இடம்பெற்றது.
- ஜனாதிபதி செயலகத்தினால் முன்வைக்கப்பட்ட 44 பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- பொது மக்களால் நேரடியாக முன்வைக்கப்பட்ட 221 பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- ஆமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 05 அமைச்சரவை பத்திரங்களுக்கு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

1.5.1.5 உள்ளக கணக்காய்வு

அமைச்சுக்கான உள்ளக கணக்காய்வு பிரிவை நிதி ஒழுங்கு விதிகளின் 133இன் படி உருவாக்கப்பட்டதாகும். இதன் அடிப்படையில் தலைமை கணக்கு அதிகாரிகள் தனது நிறுவனத்தின் நிதி ஒழுங்கு விதிகளின் 128இன் பிரகாரம் கடமைகளையும் பொறுப்புக்களையும் மேற்கொள்வதற்கு உள்ளக கணக்காய்வு பிரிவானது கட்டாயம் உருவாக்கப்படல் வேண்டும்.

2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளைள் மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள்

அமைச்சில் பின்வரும் கணக்காய்வு துறைகளில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இக்காலப் பகுதியில் ஆபத்தான கருத்திட்டங்களும் அடையாளம் காணப்பட்டன.

1. செயலாற்றுகை கணக்காய்வு
2. நிதிக் கணக்காய்வு
3. நிருவாக கணக்காய்வு
4. பௌதீக ரீதியான களப் பரிசோதனை

இப்பிரிவுகளால் தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு அமைவாக தொடர்ச்சியான கணக்காய்வு மற்றும் சுயாதீனமான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களினூடாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்கள் அடையப்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய வழிகாட்டல்களும் வழங்கப்பட்டனப்பட்டன.

செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக 2021ஆம் ஆண்டில் கணக்காய்வு திட்டத்திற்கு வெளியே பதினைந்து விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அது தொடர்பில் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் உள்ளக கணக்காய்வு பரிசோதனைகள் மற்றும் விசேட பரிசோதனைகள் மூலமாக அமைச்சினை நேரடியாக பாதிக்கக் கூடிய உள்ளக கட்டுப்பாடுகள் மீதான அவதானங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இலக்குகளின் அடைவு மற்றும் மீளாய்வு

2021ஆம் ஆண்டின் கணக்காய்வு திட்டத்தின்படி கணக்காய்வு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டன. உள்ளக கணக்காய்வுகளின் ஊடாக வழங்கப்பட்ட சிறப்பான விளக்கங்கள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் மூலம் ஆளணி முகாமைத்துவம், சொத்து முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு குறைபாடுகள், வாகனங்களின் முறையற்ற பயன்பாடுகள், கொள்வனவு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டில் காணப்பட்ட குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளக கட்டுப்பாட்டினை பலப்படுத்துவதற்கான முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன.

1.5.1.6 பொருயியல் துறை

பொருயியல் பிரிவானது நெடுஞ்சாலைகள் அமைச்சின் சார்பாக நாட்டினுள் நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. கருத்திட்ட அமுல்படுத்தல் மேற்பார்வை, முன்னேற்ற மீளாய்வு மற்றும் கருத்திட்டங்களின் தொழிநுட்ப கணக்காய்வுகளை மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் இப்பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

இலக்குகள் மற்றும் மீளாய்வுகள் - 2022

- நிர்மாணிக்கப்பட்ட நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களின் தரம் மற்றும் முன்னேற்றம் மற்றும் அவற்றின் செயலாற்றுகை அறிக்கை என்பன மேலதிக செயலாளரினால் (பொறியியல்) மேற்பார்வை செய்யப்படுவதோடு கருத்திட்ட வழிநடத்துதல் குழுக் கூட்டங்களிலும் பங்குபற்றுவர்.

- நெடுஞ்சாலைகள் நிர்மாண கட்டணங்களின் (HRS) அட்டவனை - 2022 தயாரிக்கப்பட்டு 2022 செப்டம்பர் 20இல் வெளியிடப்பட்டது.
- 2022இல் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு கிடைக்கப்பெற்ற பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட வீதி நிர்மாண முறைப்பாடுகளானது களத்திற்கு சென்று மேற்பார்வை செய்யப்பட்டது. உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

இவ்வருட காலப்பகுதியில் முகம்கொடுக்கநேர்ந்த சவால்கள்

- வழங்குனர்களினால் உரிய காலத்தில் உரிய கட்டணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் மற்றும் கட்டணங்களுக்கான வேறுபாடு தொடர்பில் அரச கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் என்பன காரணமாக ஜனவரி மாதத்திங்குள் நெடுங்சாலைகள் நிர்மாணத்திற்கான கட்டணங்களை வெளியிட முடியவில்லை.
- மாகாண சபைகளினால் உரிய காலத்தில் பதில்கிடைக்கப பெறாமையினால் வீதிகளை கையேற்பதில் காலதாமதம்

1.5.1.7 திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு

வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவாகனது நெடுஞ்சாலைகள் துறையின் கொள்கை வகுத்தல் மற்றும் அனைத்து கருத்திட்டங்களினது மேற்பார்வை செய்தல், திட்டமிடல் ஒருங்கிணைப்பு, அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மீளாய்வு என்பவற்றிற்கு பொறுப்பாகும்.

2022ம் ஆம் ஆண்டின் போது இப்பிரிவினால் திட்டமிடப்பட்ட இலக்குகளானது எதிர்பார்த்ததைப் போன்று வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு இலக்கினதும் முன்னேற்றமானது கீழ்வருமாறு விளக்கலாம்.

- 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த வேலைத் திட்டமானதுதேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய கணக்காய்வு காரியாலயத்திற்கு 2020 டிசம்பர் 30இல் சமர்ப்பிக்கப்பட்டது.

- 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது 2021.10.11 இல் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- வரவுசெலவுத்தட்ட விவாதத்திற்காக தயாரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுகளுக்கான அமைச்சின் முன்னேற்ற அறிக்கையானது பாராளுமன்றத்திற்கு 01.11.2022சமர்ப்பிக்கப்பட்டது

- 2022ஆம் ஆண்டிற்கு மொத்தமாக 05 கருத்திட்ட வழிப்படுத்தல் குழ கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

- இப்பிரிவினால் விஞ்ஞான முறையில் மீளாய்வு செய்யப்பட்ட 08 கருத்திட்டங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளைத் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- காலாண்டு முன்னேற்ற அறிக்கை, மாதாந்த முன்னேற்ற அறிக்கை

மற்றும் வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அண்மிய தரவுகளுடன் கூடிய கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக ரீதீயான தரவுகளுடன் கூடிய முன்னேற்ற அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக கருத்திட்ட முன்னுரிமையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் இப்பிரிவின் தொழிற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளும் 2022 ஆண்டு திட்டமிடப்பட்டதைப் போல் மீளாய்வு செய்யப்பட்டது.

- பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) தலைமையிலான அமைச்சரவை விஞ்ஞாபன மீளாய்வு குழுவினால் 11 அமைச்சரவை அவதாணிப்புக்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

1.5.1.8 கிராமிய அபிவிருத்தி பிரிவு

அறிமுகம்

வீதி அபிவிருத்தியின்போது தேசிய மற்றம் மாகாண வீதிகளை தொடர்புபடுத்தும் கிராமிய விதிகளின் அபிவிருத்தி செய்வது மிகவும் முடுக்கியமானதுாகும். கிராமிய வீதிகளின் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு 2020ஆம் ஆண்டில் இல. 2187/27 09.08.2020 அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தலின்படி கிராமிய வீதி அபிவிரத்தி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சானது உருவாக்கப்பட்டது.

கிராமிய மக்களுக்கான அடைவினை மற்றம் விதித்தொடர்பின் அவசியத்தை பெற்றுக்கொடுத்து அவர்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக கிராமிய விதிகளை அபிவிருத்தி செய்தல் அற்றம் நவீனமயப்படத்தல் இவ்இராஜாங்க அமைச்சின் முதன்மை விடயப்பரப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ் இராஜயங்க அமைச்சுக்கு 2022 வரவுசெலவுத்திட்டத்தில் கிராமிய வீதிகள் மற்றும் பாலரூபா 9496 மில்லியன் ஒதுக்கப்பட்டாலும் திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் ரூபா 3500 மில்லியன் நிறுத்திவைக்கப்பட்டது. இதன்படி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 6496 மில்லியன் ஒதக்கப்பட்டது.

2021 ஆம்ஆண்டில் திறைசேரியிலிரந்து போதுமான கட்டு நிதி கிடைக்கப்பெறாமையினால்- 2021 ஆம் ஆண்டின் செம்மதியான பற்றுச்சீட்டுகளுக்கான கொடுப்பணவுகளை மேற்கொள்வதற்க 2022ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதனால் 2022இல் புதிய வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதற்குமேலதிகமாக கிராதமிய பாலங்கள் அமைத்தல் கரத்திட்டத்தின் செம்மதியான கொடப்பனவுகள் 2022இல் மேற்கொள்ளப்பட்டமையினால் 2022இல் புதிய பாலங்கள் அமைக்கப்படவில்லை.

2022இல் கிராமிய வீதிகள் விடயப்பரப்பானது மீண்டும் போக்கவர்த்து மற்றம் பெருந்தெரக்கள் இமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதோடு அது தற்போது கிராமிய வீதிகள் மற்றம் பாலங்கள் அலகாக செயற்படுகின்றது.

இவ்வருடத்தினுள் புதிய கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமையினால் இங்கு நிதி முன்னேற்றம் மாத்திரம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

நோக்கங்கள்

1. கிராமிய வீதிகள் பாலங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான உபாயங்களை அபிவிருத்தி செய்தல்.
2. கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு பொருத்தமான புதிய இயந்திரங்கள முறைகள் மற்றும் தொழிநுட்பங்களை அறிமுகம் செய்தல.
3. கிராமிய பிரதேசத்தில் தொடர்பினை மேம்படுத்துவதனூடாக தொழில்வாய்ப்புக்கள் மற்றம் தொழில் முயற்சியான்மையிற்கு சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.
4. கிராமிய பிரதேசங்களில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டவிதி பாலங்களை அடையாளம் கண்டு புனரமைத்தல்

அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம்

கிராமிய வீதி அபிவிருத்தி மற்றம் கிராமிய பாலங்கள் மேம்பாட்டுக்காக 2022 ஆம் ஆண்டுக்காண வரவுசெலவுத்தில் முறையே ரூபா 8500 மற்றம் 1496 மில்லியன்கள் ஒதக்கப்பட்டது. இடைக்கால வரவு செலவுத்திட்டத்தினூடாக ரூபா 3இ500 நிறுத்தி வைக்கப்பட்டது.

வருட ஆரம்பத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டாலும் திறைசேரியிலிருந்து போதுமான கட்டுநிதி கிடைக்கப்பெறாமையினால் செம்மதியான பற்றுச்சீட்டுஈக்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.ஆகவே இவ்வருடத்தில் புதிய கருதடதிட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை. 2022இல் செம்மதியான பற்றுச்சீட்டுக்களக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு போதுமான கட்டுநிதியானது கிடைக்கப்பெறாமையினால் நிதி செயலாற்றகையானது மிகவும் குறைவாகும்.

2022 ஆம் ஆண்டில் 2021 இல் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை அமுல்படத்தப்பட்டதுடன் புதிய திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை.


இக்காலப்பகுதியில் பூரணப்படுத்தப்படவேண்டியிருந்த கிராமிய பாலங்களானது பல்வேறு காரணங்களினால் நிறைவு செய்யப்படவில்லை. ஆகவே 2022இல் முக்கியமான அத்தியவசியமான வேலைகளுக்க மாத்திரமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆத்திடங்களானது தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுகின்றது.

முகங்கொடுக்கநேர்ந்த சவாலகள் மற்றும் தடைகளாவன

1. சந்தையில் மூலப்பொரட்களின் தட்டுப்பாட மற்றம் விலை அதிகரிப்பானது செயலாற்றுகையை பாதித்தது.
2. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அமுலிலிருந்த கருத்திட்டங்களும் தடைப்பட்டது.
3. ஒப்பந்தக்காரர்களக்கு மற்றம் சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகளானத உரிய காலத்தில் செலுத்தப்படாமையினால் ஒப்பந்தக்காராகள் பாதிக்கப்பட்டனர்
4. கொடுப்பனவகளை மேற்கொள்வதற்கான கட்டு நிதி போதாமையினால் குறைந்த நிதிச்செயலாற்றுகையானது பதிவாகியுள்ளது.

அட்டவணை 2.2.1 ஒதுக்கப்பட்ட நிதியின் விரிவான கலவை (அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள்)


தலைப்பு	வீபரம்	மூலம்	ஒதுக்கம் (ரூபா.மி)		%
			தொகை	மொத்த தொகைள	
	1 அபிவிருத்தி நடவடிக்கைகள்				
435-2-3-001-2506	I. கிராமிய வீதி அபிவிருத்தி திட்டம்	பாதீட்டு ஒதுக்கீடு	5,000	6,496	76.04 %
435-2-2-002-2506	II. கிராமிய பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்.	-	1,496		22.75%
	2 செயற்பாட்டு நடவடிக்கைகள்				
435-02-01	I. ஆமைச்சரின் காரியாலயம்	மீண்டெலும்.	36.8	79.5	1.21 %
		மூலதனம்	-		
435-01-02	II. நுசிர்வாகம் மற்றம் தாபண சேவைகள்	மீண்டெலும்.	42.7		
		மூலதனம்	-		
	மொத்தம்			**6,575.5**	



2022 டிசம்பர் 31இல் உள்ளவாரான கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்


அட்டவணை 2.3.1 நிதி செயலாற்றுகை

அமுல்படுத்தும் நிறுவனம்	நிறைவு செய்யப்பட்ட திட்டங்கள்	செய்யப்பட்ட வேலைகள் (ரூபா.மி)	செலவு (2021.12.31) (ரூபா.மி)	செலுத்தப்படவேண்டிய பற்றுச்சவீட்டுகள் (ரூபா.மி)	நிறைவு செய்யப்பட்ட திட்டங்கள் (ரூபா.மி)
உள்ளூராட்சி நிறுவனங்கள்	4,849	4,585	2,335	2,710	2,250
வீதி அபிவிருத்தி அதிகார சபை	543	796	298	295	498
பிரதேச செயலாளர் காரியாலயம்	1,031	1,013	970	53	43
மொத்தம்	6,423	6,394	3,603	3,058	2,791



கிராமிய பாலங்கள் தஇட்டத்தின் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகை

mKy;gLj;Jk; epWtdk;	வுழங்கப்பட்ட உதுக்கம் (ரூபா.மி)		அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை			
	வருடம் 2021	வருடம்2022		ஓப்பந்தம் செய்யப்பட்டவை	வேலைகள் ஆரம்பிக்கப்பட்டவை	நடைபெறுபவை	பூரணப்படுத்தப்பட்டவை
வாகனப்பாவணைக்கல்லாத சிறிய பாலங்களை நிர்மாணிதம்தல் வீ.அ.அ கிராமிய பாலப் பிரிவு மற்றம் அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபணம் (RDA),SD & CC	22.3	13.3	11	-	-	-	-
	94.3	57	22	-	-	-	-
மொத்தம்	116.3	70.3	33	-	-	-	-
வாகனப்பாவனைக்கான சிறிய பாலங்களை நிர்மாணிதம்தல் வீ.அ.அ கிராமிய பாலப் பிரிவு மற்றம் அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபணம் (RDA),SD & CC	100	212	100	-	-	-	-
	-	668	460	460	239	128	82
மொத்தம்	**100**	**880**	**560**	**460**	**239**	**128**	**82**
மொத்தம்	**216.3**	**950.3**	**593**	**460**	**239**	**128**	**82**




1.6. ஏனைய நியதிச் சட்டவாக்க நிறுவனங்கள்

1.6.1 வீதி அபிவிருத்தி அதிகாரசபை

தூரநோக்கு

"சமூகத்தின் எதிர்ப்பார்ப்புகளை சிறப்பான நெடுஞ்சாலை வழியமைப்பை பெற்றுக்கொடுத்து பூர்த்தி செய்யும் நெடுஞ்சாலைப் பொரியியல் பல்துறை மேதகு நிருவனமாக இருப்பதாகும"



பணிக்கூற்று

"வீதித்துறையின் தேசிய முதன்மை நிருவனமாக, உரிய பாதுகாப்பு திட்டத்துடன் சொகுசான மற்றும் சூழல் நடப்பான முறையிலான திறனான தேசிய நெடுஞ்சாலைகள் கட்டமைப்பை வழங்குவதனூடாக போக்குவவரத்து மற்றும் தொடர்புகளையும் உறுதிப்படுத்துவதனூடாக மக்கள் மற்றும் பொருட்களின் நகர்விற்கு வழியமைத்து நாட்டின் சமூகப்பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதாகும".

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைசச்சின் கீழ்வரும் நாட்டின் நெடுஞ்சாலைகள் துறையின் பிரதான நிறுவனமாகும். வீதி அபிவிருத்தி அதிகார சபையானது 1981 ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழான ஒரு நியதிச் சட்டவாக்க நிருவனமாக நெடுஞ்சாலைகள் திணைக்களத்திற்கு பிரதியீடாக 1986 இல் உருவாக்கப்பட்டதாகும். அதனைத் தொடர்ந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையானது தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பை பராமரித்து தரமுயத்தும் பொறுப்பினை கொண்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது நாட்டின் பிரதான நெடுஞ்சாலைகள் அதிகார சபையாக ஏ-தர நெடுஞ்சாலைகள் பீ-தர நெடுஞ்சாலைகள், மற்றும் அதிவேகப்பாதைகளை பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் புதிய நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களை திட்டமிடல் வடிவமைத்து நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் என்பன இதன் பொறுப்பாகும்.

1.7நெடுஞ்சாலைத்துறை முதலீடு

அரசாங்கமானது ஒரு உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினை அடைவதை இலக்காக கொண்டுள்ளது. இவ் இலக்கினை அடைந்து கொள்வதற்கு வீதி கட்டமைப்பினை உரிய தரத்தில் பேணுவது இன்றியமையாதாகும் என அடையாளம் கண்டுள்ளது. அரசாங்கமானது நாடு முழுவதும் மக்களின் வாழ்கைத்தரத்தை முன்னேற்றுவதற்காக பெருமளவு முதலீட்டினை மேற்கொண்டு வரும் அதே வேலை வீதித்துறை அபிவிருத்தியிலும் பெருமளவான நிதியினை ஒதுக்கி போக்குவரத்துறையில் அதிகரித்த கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு பங்களிப்பு செய்துள்ளது. வீதித்துறையின் மீதான முதலீடுகளானது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஏனெனில் இம்முதலீட்டின் மூலம் பிரயாணிகள் தமது போக்குவரத்து தேவையினை இலகுவில் பூர்த்தி செய்து கொள்ளல், எரிபொருள் சிக்கனம், குறைந்த போக்குவரத்து செலவு, குறைந்த வாகன கிரயம்போன்ற நலன்களை பெற்றுக் கொள்ளலாம். 2007 - 2022 இடைப்பட்ட காலப்பகுதியில் வீதித்துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் சுருக்கம் கீழ்வருமாறு அட்டவணை 1.7.1 இல் தரப்பட்டுள்ளது.

குறிபிடப்பட்ட அட்டவணையின்படி 2007ஆம் ஆண்டிலிருந்து நோக்கும் போது அதிகூடிய முதலீடானது 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறைந்தளவான முதலீடானது 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வீதித்துறை மீதான முதலீடானது துரிதமாக அதிகரித்துச் சென்றுள்ள அதேவேளை 2016ஆம் ஆண்டில் சிறியதொரு வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இவ்வளர்ச்சியானது பிரதானமாக தேசிய முக்கியத்துவம் மிக்க அதிவேகப்பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் நிர்மாணப்பணிகள் மற்றும் பாலங்கள் மற்றும் வான் பாலங்கள் நிர்மாணித்தல் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு நாட்டினுள் போக்குவரத்து வசதியின் கிடைப்பனவு அதிக்கரிக்கப்பட்டமையினால் ஏற்பட்டதாகும்.

அட்டவணை 1.7.1 பெருந்தெருக்கள் துறை முதலீடுகள் (2007 – 2022)

வருடம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூபா பி)	செலவுகள் (ரூபா பி)	திரண்ட செலவுகள் (ரூபா பி)
2007	44.8	37.6	37.6
2008	63.2	56.8	94.4
2009	88.9	76.1	170.5
2010	89.5	84.7	255.2
2011	121.1	100.9	356.1
2012	136.0	134.1	490.2
2013	133.3	131.1	621.3
2014	148.0	148.0	769.3
2015	196.8	178.0	947.35
2016	172.6	141.7	1,089.08
2017	206.3	192.0	1,281.11
2018	196.4	166.7	1,448.03
2019	256.6	156.8	1,604.58
2020	255.0	276.3	1830.84
2021	358.3	211.6	2042.4
2022	254.61	200.39	2,242.83


தெற்கு அதிவேகப்பாதை, கொழும்பு-கட்டுநாயக்கா அதிவேகப்பாதை மற்றும் கொழும்பு வெளிவட்டப் பாதைகளின் நிர்மாணங்களானது பூரணப்படுத்தப்பட்டமையானது நகரங்களுக்கான போக்குவரத்து நெரிசல் குறைவடைந்து கிராமங்களானது நாட்டின் பொருளாத மையங்களோடு இணைக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிராந்தியத்தின் அபிவிருத்தியும் துரிதமடைந்துள்ளது. இக்குறுகிய

காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாணங்களின் பங்களிப்பானது அதிகரித்துள்ளது.

2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டு யுத்தமானது முடிவுக்கு வந்ததன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான முதலீடுகளின் தேவையானது துரிதமாக அதிகரித்தது. இதன் அடிப்படையில அப்பிராந்தியங்களில் சேதமடைந்த வீதி உட்கட்டமைப்பு வசதிகளின் புனர் நிர்மானமானது ஒரு முன்னுரிமை நடவடிக்கையாக அடையாளம் காணப்பட்டது. அதன் காரணமாக வீதித்துறை மீதான முதலீடுகளானது குறுகிய காலத்தில் பன் மடங்காக அதிகரித்துள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 2022ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டதில் 117 தலைப்பின் கீழ் ரூபா மில். 271,191.20ஒதுக்கப்பட்டதோடு இது வருட இருதியில் ரூபா மில். 254,602.92குறைக்கப்பட்டது.

2022 ஆம் அண்டில் அமைச்சானது 80சத வித நிதிச்செயலாற்றுகையை அடையப்பெற்றுள்ளது.



அத்தியாயம் 2

செயலாற்றுகைமற்றும் எதிர்காலகண்ணோட்டம்

2.1 புதிய முயற'சிகள்

இலங்கை அரசாங்கமானது ஒரு உயர் பொருளாதார வளர்ச்சியை பேனுவதற்கு எதிர்பார்க்கின்றது. இவ் இலக்கினை அடைவதற்கு வீதிவலயமைப்பினை உரிய தரத்தில் பேனுவது மிகவும் முக்கியமானதாகும். நாடு பூராகவும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக பாரிய அளவிலான முதலீடுகளை மேற்கொகொள்ளும் அதேவேலையில் அரசாங்கமானது போக்குவர்த்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பெருந்தெருக்கள் பிரிவிற்கு வரவு செலவுத்திட்ட தலைப்பு 117இன் கீழ் 2022 டிசம்பர் இறுதி வரையில் ரூபா 254,602.92 மில்லியன ஒதுக்கியுள்ளது.

2.1.1 கண்டி பல்ஊடக போக்குவர்த்து மைய அபிவிருத்தி திட்டம்

நிதிஉதவி	:	உலக வங்கி
ஆரம்ப திகதி	:	31.12.2021
முடிவுத்திகதி	:	31.05.2025
கடன் தொகை	:	69.33மி (ரூபா 25,414.42 மி)

இத்திட்டத்தின் கீழ் கண்டி நகர மையத்தில் நவீன தொழிநுட்ப வசதிகளுடன் கூடிய பயணிகள் பல்வேறு பொதுப்போக்குவர்த்து மூலங்களுக்கிடையில் இலகுவாக தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளும் வகையிலான பல்ஊடக பொாது போக்குவர்த்த மையமொன்றை உருவாக்குவதாகும். இதன் மூலம் கண்டி நகரத்தில் காணப்படும் ஒழுங்கற்ற அமைப்பு மற்றும் நெரிசல் தன்மையாயது குறைக்கப்படும். அதேவேலை இப்பல்ஊடக மையத்தை அமைப்பதனூடாக அரச மற்றம் தனியார் பஸ் போக்குவர்த்து சேவைகளானது ஒருங்கிணைந்த காலஅட்டவணைப்படி செயற்படுவதற்க வழிவகுக்கின்றது. இம்மையத்தினை அமுல்படுத்துவதனூடாக பயணிகள் தனிப்பட்ட வாகணங்களை பயன்படுத்துவதற்கு பதிலாக பொது போக்குவர்த்து வசதிகளை பயன்படுத்துவதற்கு ஊக்குபுவிக்கப்படுவர்.

இதற்கு மேலதிகமாக முறையான பொது போக்குவர்த்து அபிவிரத்தியினூடாக கண்டி நகரின் முழமையாயன தேற்றப்பாடானது மேம்படுத்தப்படுவதனால் கண்டி நகரமானது ஒரு கவர்ச்சியான சுற்றுலாத்தளமாக மேம்படுதம்தப்படலாம்.

தற்போதைய நிலைமை

கட்டுமானப்பணிகளுக்கான மற்றும் ஆலோசனை பணிகளுக்கான பெறுகை நடவடிக்கைகளானது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இது ஆரம்ப இலக்குகளில் 5.26% பூரணப்படுத்தப்படடுள்ளது.

2.1.2 தேசிய போக்குவர்த்து தரவுத்தளத்தை மேம்படுத்தல் மற்றம் வான்மை அபிவிருத்தி திட்டம்

இத்திட்டத்தின் பிரதானமான நோக்கமானது தேசிய மட்டத்தில் சிறப்பான போக்குவர்த்து உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு அவசியமான வாகணங்களின் தரவு ஆய்வு மற்றம் முகாமைத்துவ முறைமையொன்றை உருவாக்கி அமுல்படுத்துவதாகும். இத்திட்டமானது 2021 – 2025 வரையிலான 5 வருட காலத்தை கொண்டதாகும். இத்தட்த்திற்கு கொரிய குடியரசானது நிதியளிப்புச்செய்கின்றது.

இத்திட்டமானது கொழும்பு மாவட்டம் மற்றும் இலங்கை பூராகவும் காணப்படும் தேசிய விதி வலயமைப்பிமைப்பினையும் உள்ளடக்கியதாகும். கோரிய அரசாயங்கமானது ஐ.அ டொ 4 மில்லியன்களை (KRW 4,480 million) பெற்றுக்கொடுத்துள்ளது.

இத்திட்டத்தின் விடயப்பரப்பானது பின்வரும் வெளியீடுகளை உள்ளடக்கியுன்னது.

1. தேசிய மட்டத்திலான வாகன போக்குவர்த்து தரவு முகாமைத்துவ திட்டம்
2. வாகன போக்குவர்த்து தரவுகளை சேகரிப்பாதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
3. தன்னியக்க வாகணபோக்குவர்த்து தரவுத்தள முகாமை முறைமை
4. வாகன போக்குவர்த்து கேள்வி ஆய்வு இயலளவை மேம்படுத்தல்.

இத்திட்டமானது தற்போது கொரிய நிபுணர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் பிரிவிற்குமிடையிலானெ ஒரு இணைந்த ஒரு செயற்பாடாக செயற்படுத்தப்படுகின்றது.

2.2 அதி வேக நெடுஞ்சாலை அபிவிருத்தி

ஒரு நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்திக்கும் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றத்திற்கும் ஒரு திறனான போக்குவரத்து முறையானது இன்றியமையாததாகும். இலங்கையின் பெரும்பாலான தேசிய மற்றும் மாகாண நெடுஞ்சாலைகளானது 50 வருடங்களுக்கு முன்பு அப்போதைய வாகனங்களின் எண்ணிக்கை, வாகனங்களின் வகைகள் மற்றும் வேகத்திற்கு பொருத்தமானதாக நிர்மாணிக்கப்பட்டதாகும். ஆகவே தற்போதைய போக்குவரத்துச் சேவைகளின் கேள்விக்கு அமைவாக நாட்டின் அனைத்து பிராந்தியங்களையும் தொடர்புபடுத்தக்கூடிய வீதிக் கட்டமைப்பொன்று இன்றியமையாததாகும். நாட்டின் அனைத்து பொருளாதார மையங்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் நாடு பூராகவும் 800 கி.மீ. அதிவேகப் பாதை வலையமைப்பொன்றை உருவாக்க எதிர்பார்க்கின்றது.

முன்மொழியப்பட்டுள்ள உயர் போக்குவரத்து அதிவேகப் பாதை வலயமைப்பின் கூறுகளாக பின்வரும் அதிவேகப் பாதைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

1	**கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதை (25.1கி.மி)**
2	தெற்கு அதிவேகப் பாதை கொட்டாவையிலிருந்து மத்தலை வரை (200 கி.மீ) மற்றும் அந்தரவ - ஹம்பந்தோட்டை நெடுஞ்சாலைப் பகுதி (16.6 கி.மீ)
3	வேளிவட்டப் பாதை கொட்டாவை-கெரவலப்பிடிய (29.5 கி.மீ)
4	மத்திய அதிவேக நெடுஞசாலை 166.6 கி.மீ)
5	மேல் உயர்த்தப்பட்ட நெடுஞசாலை புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துருகிரிய வரை (16.4 கி.மீ)
6	மேல் உயர்த்தப்பட்ட துறைமுக நுழைவு வீதி (5.3 கி.மீ)
7	ருவன்புர அதிவேக நெடுஞசாலை (74 கிமீ)

மேற்கூறப்பட்டுள்ள அட்டவணையில் கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதை, கொட்டாவையிலிருந்து மத்தலை வரை மற்றும் அந்தரவ - ஹம்பந்தோட்டை நெடுஞ்சாலைப் பகுதி, மற்றும் கொட்டாவை - கெரவலப்பிடிய வரையிலான வெளிவட்டப் பாதை மற்றும் மத்திய அதிவேகப்பாதையின் II கட்டமான – மீரிகமை – குரநாகலை வனாயிலான பகுதி என்பன பாவனையிலள்ளதோடு மிகுதி வீதிகளானது பல்வேறு மட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டுவருகின்றன. அல்லது ஆரம்ப கட்டத்தில் காணப்படுகின்றன. முன்மொழியப்பட்டுள்ள அதிவேகப் பாதைகளின் வரைபடம் ***இணைப்பு 02*** இல் விபரிக்கப்படுகின்றது.

2.2.1 அதிவேகப் பாதைகளின் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிவேகப் பாதைகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவானது இவ் அதிவேகப் பாதைகளின் சிறப்பான செயற்பாட்டிற்கு பொருப்பாகவுள்ளது. இது வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இடம்பெறுகின்றது.

அதிவேகப் பாதைகளின் ஆரம்ப திட்டமிடல், போக்குவரத்து நடவடிக்கைகளின் முகாமைத்துவம் மற்றும் செயற்படுத்துகை, கட்டணம் அறவிடல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளுடன் பாதீடு மற்றம் கணக்காய்வு என்பனவும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதிவேக நெடுஞ்சாலைகளின் நிலைமை

கொழும்பு - கட்டுநாயக்க, தெற்கு வெளிவட்ட அதிவேகப் பாதை, தெற்கு அதிவேகப் பாதை கொட்டாவையிலிருந்து மத்தலை வரை மற்றும் அந்தரவ - ஹம்பந்தோட்டை நெடுஞ்சாலைப் பகுதிகளில் பயணித்த வாகனங்களின் எண்ணிக்கையானது கீழ்வரும் அட்டவண 2.1.1 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.1.1 – அதிவேகப் பாதைகளில் சராசரியாக நாளாந்த பயணிக்கும் வாகணங்களின் எண்ணிக்கை

வருடம்	தெற்கு மற்றும் வெளிவட்ட அதிவேகப் பாதைகளில் நாளாந்தம் பயணிக்கும் வாகணங்களின் எண்ணிக்கை	கட்டுநாயக்க அதிவேகப் பாதையில் நாளாந்தம் பயணிக்கும் வாகணங்களின் எண்ணிக்கை
2013	11,737	15,194
2014	19,095	18,401
2015	27,736	20,782
2016	44,384	23,974
2017	52,977	25,844
2018	60,524	27,971
2019	65,246	27,640
2020	71,857	19,117
2021	77,056	21,762
2022	59,833	24,746

2001 பின்பு மற்றும் 2022இன் ஆரம்பத்திலிருந்து செயற்பாட்டிலுள்ள அணைத்து அதிவேக நெடுஞ்சாலைகளினதும் வாகன போக்குவர்த்து தரவுகளானது பிரிக்கப்பட்டு தனித்தனியாக அறிக்கையிடப்படுகின்றது.

2022 முடிவில் இவ்அதிவேகப்பாதைகளில் பயணித்த நாளாந்த சராசரி வாகணங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவமைண 2.2.1.2 - 2022 இல் அதிவேகப்பாதைகளில் பயணித்த வாகணங்களின நாளாந்த சராசரி எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

அதிவேகப்பாதையின் பெயர்	சராசரி நாளாந்த வாகனங்களின் எண்ணிக்கை
தெற்கு அதிவேக நெடுஞசாலை	22,500.9
தெற்கு அதிவேகப் பாதையின் தொடர்ச்சி	5,552.43
வெளிவட்டப் பாதை	31,784.4
கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் நெடுஞசாலை	24,746.4
மத்திய அதிவேக நெடுஞசாலை	8,279.99

மேலுள்ள அதிவேக நெடுஞ்சாலைகளில் வெளிவட்டப்பாதையில் அதிகூடிய வாகனங்கள் பிரயாணித்துள்ளதோடு தெற்கு அதிவேகப்பாதையின் விரிவாக்கப்பட்ட பகுதியில் குறைந்தளவான எண்ணிக்கையான வாகணங்கள் பதிவாகியுள்ளன.

அட்டவணை 2.1.1.1இன்படி வெளிவட்ட அதி வேக நெடுஞ்சாலை, தெற்கு மற்றும் அந்தர வெவ மற்றும் ஹம்பந்தோட்டை அதி வேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் நாளாந்த சராசரி வாகனங்களின் எண்ணிக்கையானது 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிகையில் 2022 இல் நாட்டில் எற்பட்டுள்ள அசாதாரண பொருளாதார சூழ்நிலைகாரணமாக 22% சதவீதத்திற்கும் மேல் குறைவடைந்துள்ளது. இதற்கு எதிர்மறையாக 2021இல் வெளிவட்ட அதி வேக நெடுஞ்சாலை, தெற்கு மற்றும் அந்தர வெவ மற்றும் ஹம்பந்தோட்டை அதி வேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் நாளாந்த சராசரி வாகனங்களின் எண்ணிக்கையானது 7% அதிகரித்தது. இது பிரதானமாக அதிவேகப் பாதையின் புதிதாக திறக்கப்பட்ட பகுதிகளின் பாவனையினால் ஏற்பட்ட அதிகரிப்பாகும்.

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேகப் பாதையானது பாவணைக்காக திறக்கப்பட்திலிருற்து சராசரி நாளாந்த வாகனங்களின் எண்ணிக்கையானது வருடாந்தம் அதிகரித்துச் சென்றுள்ளது. எனினும் 2019 ஆம் ஆண்டில் இப்போக்கானது ஒரு சதவீத வீழ்ச்சியைக் காட்டியுள்ளது. இதே போல் 2020 இல் கொவிட் 19 தொற்று பரவலின் காரணமாக ஏப்ரல் மாதத்தின் போது இவ்வீதியானது மூடப்பட்டிருந்தமையினால் பயணித்த வாகணத்தொகையில் 40 சத வீத வீழ்ச்சியைக் காட்டியது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் மாதாந்த வாகனப்போக்குவாத்து -2022

1.7 வெளிநாட்டு உதவி பெறுகின்ற கருத்திட்டங்கள்

கருத்திட்டத்தின்பெயர்	நிதிசார் மூலகங்கள்		கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டபெறுமதி(ரூபா. மில்.)	ஒருமித்த செலவு(ரூ.மி.) (2022.12.31 திகதியிற்கு)	கால எல்லை	பொழிப்பு கருத்திட்ட முன்னேற்றம்	
	உள்நாட்டு : வெளிநாட்டு	நிறுவனம்				%	விபரம்
பெரும்பாக கொழும்பு நகர்ப்புற போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் கருத்திட்டங்கள்	உ வெ	(JBIC) இலங்கை அரசாங்கம்	4,980.0	4729.72	2009-2013- கட்டம் 1 2013-2023 - கட்டம் 2 -	97%	நகர்ப்புற திட்டங்களை தயாரித்தல் பல்மாதிரி போக்குவரத்து மையங்களைத் திட்டமிடுதல் ஊட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு
போக்குவரத்து கருத்திட்டங்களை ஏற்பாடு செய்யும் வசதி (TPPF) புகையிரத ஒதுக்கீட்டில் அனுமதியற்ற முறையில் குடியமர்ந்துள்ள நபர்களை மீள குடியமர்த்துதல்.	வெ உ	ADB இலங்கை அரசாங்கம்	1,456.50 9,798.08	4,836.10	2016-2023		கருத்திட்டத்துடன் தொடர்புடைய விவைளவுகள் 2021.04.30 திகதியிற்கு நிறைவு செய்யப்பட்டுள்ளன.
	உ	இலங்கை அரசாங்கம்	9600.00	3181.45	2016-2025	33.14 %	
புகையிரத வினைத்திறன் மேம்படுத்தும் கருத்திட்டம் (REIP)	வெ உ	ADB இலங்கை அரசாங்கம்	28,232.00 5,646.40	5005.64 230.52	2019- 2025	17.73 % 4.08%	
மஹவ -ஓமந்தை புகையிரத கருத்திட்டம்	வெ	இந்தியா கடன் உதவி	91.26	12,639.4	3 வருடங்கள்	40% 53%	பௌதீக நிதி
உலக வங்கி கடன் உதவியின் கீழ் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம்	வெ	உலக வங்கி	459.7	212.4	2 வருடங்கள்	99%	புகையிரத திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இபோச மூலம் நிறைவேற்றுள்ள முன்னேற்றம் 95% ஆகும். எஞ்சிய பணிகள் நிறுவன ஏற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்படும்.

உ – உள்நாட்டு வெ - வெளிநாட்டு

02 அத்தியாயம்

பயனுறுதி வாய்ந்த மற்றும் வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவையை நோக்கி பயணிப்போம்.....

போக்குவரத்து என்பது நாட்டின் பொருளாதாரத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான சேவையாகும். முறையான போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதன் மூலம் ஒரு நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடையும்போது, நெடுஞ்சாலை மற்றும் புகையிரத வீதி முறைமை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்கம் செய்தல், வசதியான மற்றும் வினைத்திறமையான பயணிகள் போக்குவரத்து, சுற்றுச்சூழல் பாதிப்புகள், போக்குவரத்து நெரிசல் போன்ற காரணிகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். பயணிப் பொதுமக்களின் மற்றும் கைத்தொழில்கள் மற்றும் சேவைத் துறைகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதும் அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி செயல்முறைக்கு பங்களிப்பு செய்வதும் போக்குவரத்து அமைச்சின் பொறுப்பாகும். அந்த நோக்கத்திற்காக, கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றை செயல்படுத்துதல், மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் பின்தொடர்தல் ஆகியவை போக்குவரத்து அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கை மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த முக்கிய நெருக்கடிகளில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலை எதிர்பாராத அதிகரிப்பு ஆகியவை அடங்கும். இதன் காரணமாக தனியார் வாகனங்கள் மாத்திரமன்றி மாற்று போக்குவரத்து சேவைகள் தொடர்ந்தும் கொண்டு பல சிக்கல்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்ததுடன் இங்கு பல்வேறு கட்டுப்பாடுகளின் கீழ் பொது போக்குவரத்து சேவைகள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பேணப்பட்டது. எனவே, மக்கள் தங்கள் பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அதிகளவில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளை நாட வேண்டியேற்பட்டன.

பொருளாதார மேம்பாடு மற்றும் மனித நல்வாழ்வுக்கான தரமான, நம்பகமான மற்றும் பேரழிவை எதிர்க்கும் போக்குவரத்து சேவையை கட்டியமைப்பதில் புகையிரத திணைக்களத்திற்கு முக்கிய பங்கு உள்ளது. தற்போதுள்ள புகையிரத வலையமைப்பை மேம்படுத்தும் கருத்திட்டங்கள், மஹவ முதல் ஓமந்தே வரை புகையிரத பாதை புனரமைப்பு கருத்திட்டம் மற்றும் பெரும்பாக கொழும்பு புறநகர் புகையிரத திட்டம், இந்திய கடன் திட்டத்தின் கீழ் புகையிரதக் தொகுதியினை வலுப்படுத்துவற்காக புதிய புகையிரத பெட்டிகளை கொள்வனவு செய்தல், உள்ளூர் நிதியில் பயணிகள் பெட்டிகளை புனரமைத்தல் மற்றும் புகையிரத தொகுதியின் தொடர்ச்சியான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பேருந்துகள் மூலம் அளிக்கப்படுகின்ற பயணிகள் போக்குவரத்து சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக இந்திய கடன் உதவியின் கீழ் 200 பேருந்துகளை இறக்குமதி செய்து சேவையில ஈடுபடுத்துதல். பயணிகள் வசதி மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து புகையிரதத்தில் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் வசதியாக புகையிரத மேடைகளை உயர்த்துதல் மற்றும் நீடிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான அணுகல் வசதிகள் முதலியன விரிவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை மக்களுக்கு பாதுகாப்பான, வசதியான மற்றும் நம்பகமான பயணிகள் போக்குவரத்து சேவையை நியாயமான கட்டண முறைமையின் கீழ் வழங்குவதன் மூலம் அரசாங்க துறையின் பங்களிப்போடு எழுந்து நிற்கும் மக்களின் நட்புறவு நிறுவனமாக இலங்கை போக்குவரத்து சபையை குறிப்பிட முடியும். இந்த நிறுவனத்தின் மூலம் இலங்கையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் அதன் சேவைகளை தொடங்குவதன் மூலம் மக்களுக்கு பல சேவைகளை வழங்குகிறது. இபோச மற்றும் புகையிரத ஒருங்கிணைந்த சேவையை முறைசார்படுத்தி விரிவுபடுத்துதல், தொலைபேசி அழைப்புகள் மூலம் பேருந்துகளில் இருக்கைகளை முன்பதிவு செய்யும் வசதியினை ஏற்படுத்துதல், காலவரைப் பயணச் சீட்டு

சேவைகள், இணையான பயணிகள் சேவைகள், அவசரகால கோளாறுகள் ஏற்பட்டால் இபோச சேவைகள், மஹரகமை "அபேக்ஷா" மருத்துவமனைக்கு விசேட பேருந்து சேவையைத் தொடங்குதல். "பேருந்து நூலகசாலை" கருத்திட்டம், "Park & Ride" கருத்திட்டம் போன்றவை இபோசபையின் மூலம் வழங்கும் முக்கிய சேவைகளாகும். உலக வங்கி உதவியுடன் புகையிரத நிலையங்கள் மற்றும் பேருந்து டிபோக்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக கருத்திட்டம் (CERC கருத்திட்டம்) செயல்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் போக்குவரத்து ஊடகங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பேருந்துகள் மூலம் பயணிகளை கொண்டு செல்வது தொடர்பான தேசிய கொள்கை தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கு இணங்க, இலங்கை மக்களுக்கு வினைத்திறன்வாய்ந்த, உயர் தரமான சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் வசதியான போக்குவரத்து சேவையை வழங்குவதற்கும் மற்றும் நவீன போக்குவரத்தை உருவாக்குவதற்கும் பல்வேறு கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

வசதிகள் குறைந்த பிரதேசங்களில் உள்ள மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் சமூக நலப் பேரூந்து சேவையான "சிசு செரிய" மற்றும் "நிசி செரிய" சேவைகள் இயங்கி வருகின்றன. புதிய "சிசு செரிய" 52 சேவைகள், புதிய "நிசி செரிய" 25 சேவைகள் 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. சிசு செரிய மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொது போக்குவரத்து சேவையை வழங்குவதுடன் செயல்பாட்டில் உள்ள சிசு செரிய சேவைகளின் மொத்த எண்ணிக்கை 1,617 ஆகும். நிசி செரிய சேவை, இரவுநேர மற்றும் விடியற்காலையில் பயணிகளின் போக்குவரத்து வசதிகளை பூர்த்தி செய்யும் வகையில் செயற்படுவதுடன் செயற்படுகின்ற நிசி செரிய சேவைகளின் மொத்த எண்ணிக்கை 216 ஆகும். எந்தவித பேருந்து சேவையும் இயக்கப்படாத, சமூக ரீதியாக பேருந்து சேவை தேவையாக இருப்பினும் பொருளாதார ரீதியாக இலாபமற்ற வீதிகளாக இருப்பதால் பயணிகள் போக்குவரத்திற்காக ஓட்டுநர்கள் முன்வராத கிராமிய பிரதேசங்களில் வாழுகின்ற மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக "கெமி செரிய" பேருந்து சேவை செயல்படுத்தப்படுவதுடன் செயல்படுத்தப்பட்ட மொத்த சேவைகளின் எண்ணிக்கை 13 ஆகும்.

ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையிலான நவீன தொழில்நுட்பம் இந்த நாட்டுக்கு ஏற்றவாறு பொது போக்குவரத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்பட வேண்டும். போக்குவரத்துத் துறையைப் பற்றிய ஆராய்ச்சி அறிவை போக்குவரத்துத் துறைக்கு வழங்குவதற்காக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தரப்பினர்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பை கட்டியமைப்பது இதற்கு மிகவும் முக்கியமானதாகும்.அங்கு பொது போக்குவரத்து சேவைக்கான நவீன தொழில்நுட்ப அறிமுகத்தின் கீழ் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயல்முறைகளை தானியக்கமாக்குதல், Google (கூகுள்) தொழில்நுட்பத்தினூடாக பொது போக்குவரத்து சேவை தகவல்களை வழங்குதல், MyBus-SL உள்ளீட்டை அறிமுகப்படுத்துதல், பேருந்துகளுக்கு GPS பொருத்துதல் மற்றும் நிகழ்நிலை இருக்கை முன்பதிவு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆண்டில், மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையத்தின் மூலம் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் மாகும்புர - காலி பேருந்துகளுக்காக முன்கொடுப்பனவு அட்டை முறையை அறிமுகப்படுத்தியது.

இலங்கைக்குள் மோட்டார் வாகனப் பதிவு, ஒழுங்குமுறை, சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல், வீதிப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களைப் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் வினைத்திறன் வாய்ந்த மற்றும் விளைவுபெருக்கம் கொண்ட சேவையை வழங்குவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்ட அலுவலகங்கள் நிகழ்நிலை (online) தொடரர்பின் மூலம் நாரஹேன்பிட்டியில் உள்ள தலைமை அலுவலகத்துடன் இணைவதன் மூலம், கிராமப்புற/பிராந்திய மட்டத்தில் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றி, நவீன வசதிகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை எளிதாக்குவது திணைக்களத்தின் எதிர்கால அபிலாஷைகளில் முக்கியமானதாகும். இந்த அமைச்சின் மூலம், வழங்கப்படும் சேவைகளுக்காக இலத்திரனியல் அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதியை வழங்குதல், இலக்கத் தகடுகளை விநியோகிப்பதற்கு விரைவு விநியோக (கூரியர்) முறையை அறிமுகப்படுத்துதல் போன்ற இலக்குகளை இந்த அமைச்சு எட்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை 125,250 ஆகும். பதிவு செய்யப்பட்ட புதிய வாகனங்களின் எண்ணிக்கை 20,510 மற்றும் வாகன கைமாற்றங்களின் எண்ணிக்கை 612,877 ஆகும்.

”அனைவருக்கும் பாதுகாப்பான வீதி அமைப்பு” என்ற தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தாபிக்கப்பட்டுள்ளது. வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ”தேசிய போக்குவரத்து பாதுகாப்பு பற்றிய ஆணைக்குழு” என நிறுவுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதுடன், அதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு, சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, 2021-2025 காலப்பகுதியில் வீதி விபத்துகளை குறைப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் பங்களிப்புடன் ஐந்தாண்டு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. 150 மில்லியன் ரூபா பெறுமதியான லேசர் ஸ்பீடோமீட்டர், டார்க் கிளாஸ் பரிசோதனை லுமினஸ் மீட்டர், ஒலி சோதனை மீட்டர் போன்ற தொழில்நுட்ப உபகரணங்கள் இலங்கை போக்குவரத்து பொலிஸாருக்கு வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளது. அத்துடன், போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காணும் உபகரணத்தொகுதிகளை கொள்வனவு செய்வதற்குத் தேவையான 10 மில்லியன் ரூபா இலங்கை பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்களின் உருக்குலைந்த பயணிகள் பேருந்துகள் சலுகை விலையில் உயர்ந்த தரத்தில் பழுதுபார்க்கப்பட்டு இயக்கத்துக்கு இணைப்பதற்காக லக்திவ பொறியியல் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை இலங்கைப் பேருந்துகளின் பேருந்து உடம்புகளின் பழுதுபார்க்கும் பணியை மட்டுமே மேற்கொண்ட இந்த நிறுவனம் 2021ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குரிய அனைத்து வாகனங்களின் பழுதுபார்ப்புகள் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்காக நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வாகன சேவை மையம் நிறுவப்பட்டது.

தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்தையும், நாடு பூராவுமுள்ள 25 மாவட்ட அலுவலகங்களையும் கொண்டுள்ளது. அனைத்து ஓட்டுநர் உரிம விண்ணப்பதாரர்களுக்கும் தரமான மருத்துவ பரிசோதனைகளை நடத்தி உடல் மற்றும் உள ரீதியிலான பொருத்தப்பாடு பற்றிய உறுதிப்பாட்டினை வழங்குவது இந்த நிறுவனத்தின் முக்கிய பணியாகும். 2022 ஆகஸ்ட், மொத்தம் 558,032 மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் இற்றைப்படுத்திய தேசிய தரைப் போக்குவரத்துக் கொள்கையொன்றின் தேவைப்பாடு இந்த ஆண்டிற்குள் அத்தியவசிய தேவைப்பாடாக இருப்பதைக் காணக்கூடியதான இருந்தது. நெருக்கடியான காலங்களில் மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து சரியான நேரத்தில் முடிவுகளை எடுப்பதற்கான போக்குவரத்து கொள்கையொன்றில் உள்ள தேவை நன்கு பிரதிபலித்தது. எனவே, பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் அனைத்து பரிமாணங்களுக்கும் தீர்வு காண தற்போதுள்ள போக்குவரத்து கொள்கையை இற்றைப்படுத்தும் பணி 2022 ஆம் அண்டில் தொடங்கப்பட்டது.

பொதுப் போக்குவரத்துச் சேவைக்கு அதிகமான மக்களை ஈர்ப்பது இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு பெரிய சவாலாக இருப்பதுடன், மேலும் மக்கள் நட்புறவு வாய்ந்த, வசதியான, வினைத்திறன் வாய்ந்த மற்றும் சரியான நேரத்தில் போக்குவரத்து சேவையை செயல்படுத்துவதன் மூலமே அதை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும். எனவே, இலங்கையில் போக்குவரத்துத் துறை தொடர்பாக நிறுவப்பட்டுள்ள இந்த நிறுவனங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, அவற்றின் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வை செய்வதன் மூலம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இலங்கை போக்குவரத்துத் துறையின் முன்னோடியாக செயல்படுகிறது.

எம். எம். பி. கே. மாயாதுன்னெ
செயலாளர்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு

03 அத்தியாயம்

2022 திசெம்பர் 31 ஆம் திகதி முடிடைந்த வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதிச்செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

3.2 நிதிநிலைமை பற்றிய கூற்று

3.3 காசுப்பாய்ச்சல் பற்றிய

* மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைகள் சம்பந்தப்பட்ட தொடர்புடைய தகவல்கள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நெடுஞ்சாலைகள் பிரிவால் உள்ளிடப்பட்டுள்ளன.

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

-

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமானமதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு (மி.ரூபா)	இறுதி மதிப்பீடு (மி.ரூபா)	தொகை (மி.ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு % ஆக
20.03.99.00	ஏனைய	43.75	43.75	24.21	55.34
20.02.02.99	கிடைப்பனவுகள்	1.42	1.29	1.09	84.50
20.03.03.02	அ.ஊ.மு.பி.வட்டி அபராதம் மற்றும் பறிமுதல்	1.00	1.00	0.06	6.00
20.02.01.01	வீட்டு வாடகை	1.42	1.29	0.11	8.53
20.06.02.02	மூலதனச் சொத்துக்களின் விற்பனை (மற்றவை)	0.51	0.36	0.48	133.34

3.6 ஒதுக்கீட்டுப்பயன்பாட்டின் செயலாற்றுகை

ஒதுக்கீட்டுவகை	ஒதுக்கீடு (ரூ)		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, முடிவு செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டு அளவின் % ஆக
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீணடெழும் மூலதனம்	10,726,020,000	10,726,020,000	9,914,581,902.21	92.43
	3,935,500,000	3,935,500,000	3,867,411,276.82	98.27

3.7 நி.பி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச்செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

தொ/இல.	அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு (ரூபா)		உண்மையான செலவினம் ரூபா (ரூ)	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, வழங்கிய இறுதி ஒதுக்கீடுகளின் % ஆக
			ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	குருநாகல் மா/செ	குருணாகல் - ஹபரணை கருத்திட்டத்துக்காக காணிகளை கையகப்படுத்துதல் மற்றும் நிர்வாகச் செலவினங்களை ஏற்பதற்காக	3,250,000	3,250,000	3,250,000	100
02	அனுராதபுரம் மா/செ		450,000	450,000	449,947.55	100
03	பொலன்னறுவை மா/செ		350,000	350,000	350,000	100
04	மாத்தளை மா/செ		2,000,000	2,000,000	1,846,599.13	92

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2022 திகதியிற்கு சரக்கு ஒப்பாய்வு அறிக்கைக்கமைய மீதி	31.12.2022 திகதியிற்கு நிதி நிலைமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	இதற்கான இறுதி அறிக்கையை நெடுஞ்சாலைகள் அமைச்சின் மூலம் முன்வைக்கப்படும். அதுவரை போக்குவரத்து பிரிவு தொடர்பான தரவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.			
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்				
9153	காணி				
9154	அருவச் சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் பணிகள்				
9180	குத்தகை சொத்துக்கள்				

3.9 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை **

** பாராளுமன்றத்திற்குச் சமர்பிக்கும்போது, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் மூலம் வெளியிடப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கை - **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நெடுஞ்சாலைகள் பிரிவால் முன்வைக்கப்படுகின்றது.**

அத்தியாயம் 04

செயலாற்றுகை சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயல்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின்சதவீதமாக(%) உண்மையான வெளியீடு			
	100 - 90%	89- 75%	74 - 50%	49 - 0%
புகையிரத பிரிவு				
➢ சரக்கு போக்குவரத்து புகையிரத எண்ணிக்கை	✓			
➢ தினசரி செயற்படுத்தப்படுகின்ற புகையிரத எண்ணிக்கை	✓			
➢ நிர்மாணிக்கப்பட்ட புகையிரதவீதி (நீளம் கி.மீ)	✓			
பேருந்துப் போக்குவரத்து				
➢ நடைமுறைப்த்தப்பட்ட புதிய சிசுசெறிய பேருந்து சேவைகளின் எண்ணிக்கை			✓	
➢ நடைமுறைப்த்தப்பட்ட புதிய நிசிசெறிய பேருந்து சேவைகளின் எண்ணிக்கை				✓
➢ புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சேவைகளின் எண்ணிக்கை				✓
➢ வருடமொன்றுக்கு பயிற்றுவிக்கப்பட்ட பேருந்து பதவியணி எண்ணிக்கை		✓		
➢ செயல்படுத்தப்பட்ட அட்டவணை எண்ணிக்கை (ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கிணைக்கப்படாத)			✓	
➢ பொருத்தப்பட்ட சமிஞை பலகைகளின் எண்ணிக்கை				✓
➢ போக்குவரத்து தொடர்பான தரப்பினர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்			✓	
➢ தேசிய போக்குவரத்து புள்ளிவிவர அறிக்கைகள் தயாரித்தல்	✓			
➢ பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை		✓		
மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்				
➢ பௌதீக வள அபிவிருத்தியின் கீழ் கட்டுமானம் மற்றும் பழுதுபார்ப்புகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்	✓			
➢ நிலையான சொத்துக்களை கையகப்படுத்துவதன் கீழ் வன்பொருள் மற்றும் மென்பொருள் கையகப்படுத்துதலின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்	✓			
➢ மனித வள மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் நிதி முன்னேற்றம்	✓			
➢ மூலதன முதலீட்டின் கீழ் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமங்களின் அளவு மற்றும் அதற்கான செலவினம்			✓	
தேசிய வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை				

➢ வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ஆணைக்குழுவாக மாற்றம் செய்தல்			✓	
➢ ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 2011-2021 மீளாய்வு மற்றும் 2021-2030 புதிய சாலை பாதுகாப்பு தசாப்தத்திற்கு ஏற்ப ஒரு திட்டத்தை தயாரித்தல்.				✓
➢ மோட்டார் சைக்கிள் விபத்துகளை குறைப்பது குறித்து ஆய்வு நடத்துதல்			✓	
➢ இலங்கையில் ஏற்படுகின்ற பாதசாரி விபத்துக்களை குறைப்பது குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்				✓
➢ வீதி விபத்து தரவு முகாமைத்துவ முறைமையை நிறுவுதல்				✓
➢ வீதி பாதுகாப்பு குறித்த மின் நூலகத்தை இற்றைப்படுத்துதல்	✓			
➢ கிராமப்புற வீதிகளில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த மாவட்ட செயலக மட்டத்திலும் செயலக மட்டத்திலும் கட்டமைப்பை அமைத்தல்.				✓
➢ வீதி பாதுகாப்பு தேசிய வாரம் தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல்	✓			
➢ பாடசாலை வீதி பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துதல்		✓		
➢ பாதுகாப்பான வாகன அமைப்பை உருவாக்குவதற்கு சாலைத் தகுதிச் சான்றிதழ் வெளியிடும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆதரித்தல்			✓	
➢ விபத்துகள் பெருமளவில் இடம்பெறுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய கிராமிய வீதிகளில் விபத்து ஏற்படும் இடங்களில் திட்டங்களை செயல்படுத்துதல்.	✓			
அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டி				
➢ மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை	✓			
➢ அலுவலர்களின் இயலளவினை மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ள பயிற்சிகளின் எண்ணிக்கை	✓			
➢ பாராளுமன்றத்துக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளின் எண்ணிக்கை	✓			
➢ அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் திறைசேரி நிதிஏற்பாடுகளிலிருந்து செலவு செய்யப்படுகின்ற சதவீதம்			✓	
➢ வருடத்துக்குள் பேணப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு எண்ணிக்கை		✓		

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட ஏற்புடைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

இலக்கு /குறிக்கோள்	இலக்குகள்	அடையப்பெற்ற குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம் (2019 வருடத்துடன் ஒப்பிடுகையில்)		
			0 - 49%	50 - 74%	75 - 100%
ஆரோக்கியமான வாழ்க்கையொன்றினை உறுதிபடுத்தி அனைத்து வயதுகளிலுமுள்ள அனைவரினதும் நலனை மேம்படுத்துதல்	2030 ஆம் ஆண்டாகும் போது நெடுஞ்சாலைகளில் விபத்துக்களின் மூலம் இடம்பெறுகின்ற காயங்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையினைக் குறைத்தல்	மரண விகிதாசாரம்	✓		
நகரங்கள் மற்றும் குடியிருப்புகள் பூரணத்துவம் பெற்ற, பாதுகாப்பான, வலுவான மற்றும் நிலைத்திருக்கக்கூடிய வகையில் தயாரித்தல்	குறிப்பாக இடர்பாடுகள் ஏற்பட முடியுமான நிலைமைகளிலிருக்கும் பெண்கள் , குழந்தைகள் ,மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதியவர்கள் குறித்து விசேடகவனம் செலுத்தப்பட்டு நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பினை மேம்படுத்துதல்,பொது, 2030 போக்குவரத்து முறைமை கணிஷமானவில் விஷ்தரிப்பதன் மூலம் 2030 ஆம் ஆண்டாகும் போது அனைவருக்கும் பாதுகாப்பான குறைந்தவிலைக்கு பெற்றுக் கொள்ளமுடியுமான அணுகக்கூடிய மற்றும் நிலைப்பேறான போக்குவரத்து முறைமையை வழங்குதல்.	1. சரக்குப் போக்குவரத்து புகையிரத எண்ணிக்கை			✓
		2.தினசரி போக்குவரத்து செய்கின்ற புகையிரத எண்ணிக்கை			✓
		3.புதிய சிசுசெறிய, கெமிசெறிய, மற்றும் நிசிசெறிய பேருந்து சேவைகளின் எண்ணிக்கை		✓	

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2030 நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக ஒட்டுமொத்த அபிவிருத்திக்கு பயனுறுதி வாய்ந்த முறையில் பங்களிப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு அளவுரீதியான மற்றும் தரமான வலுவான போக்குவரத்து சேவையை ஏற்படுத்துவதற்காக போக்குவரத்து அமைச்சு ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்திற்குள் பல இலக்குகளுக்காக போக்குவரத்துத் துறையானது நேரடியாகப் பங்களிப்பை வழங்கி வருவதுடன் ஏனைய பல துறைகளின் இலக்குகளுக்காக மறைமுகமாகப் பங்களிக்கிறது. இதன்படி, நோக்கங்கள் 3,9 மற்றும் 11ன் கீழ் போக்குவரத்து துறைக்கு நேரடியாக உரிய இலக்குகளை அடையாளம் காண முடியும்.

3 ஆம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

3.6 2030 ஆகும்போது நெடுஞ்சாலைகளில் ஏற்படுகின்ற விபத்துக்களால் ஏற்படும் காயங்கள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

சாலை விபத்துக்களால் தினமும் 8 பேர் உயிரிழப்பதாக அறிக்கையிடப்பட்டிருப்பதுடன் தொழிற்படையைச் சேர்ந்த வயதுடையவர்களே பெரும்பாலும் விபத்துகளால் மரணம் அல்லது அங்கவீனமடைகின்றனர். இது நாட்டின் பொருளாதாரததைப் போன்று சமூக ரீதியாகவும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, வீதி விபத்துக்களை குறைத்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளையெடுப்பதை முன்னுரிமையாகக் கருதி போக்குவரத்து அமைச்சின் மூலம் நடவடிக்கையெடுக்கப்படுகின்றது.

- இலங்கையில் ஏற்படுகின்ற பாதசாரி விபத்துக்களை குறைப்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்
- மாகாண வீதி பாதுகாப்பு அலகுகள் ஊடாக நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்
- பாதுகாப்பான வாகன அமைப்பை உருவாக்குவதற்காக சாலைத் தகுதிச் சான்றிதழ்களை வழங்கும் செயல்முறைக்கு ஆதரவை வழங்குதல்
- பாடசாலை வீதி பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்

- வீதி விபத்துக்கள் பெரும்பாலும் இடம்பெறுகின்ற (Blackspot) மற்றும் சனநெரிசல் அதிகமாகவுள்ள இடங்களில் விழிப்பூட்டும் பலகைகளை பொருத்துதல்.
- வீதி பாதுகாப்பினை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவத்துக்காக இலங்கை வீதி விபத்துக்கள் தொடர்பான தரவுத்தளத்தினை நிறுவுதல்.

- கிராமப்புற வீதிகளில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த மாவட்ட செயலக மட்டத்திலும் செயலக மட்டத்திலும் கட்டமைப்பை அமைத்தல்.

9 ஆம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

9.1 பொருளாதார அபிவிருத்தி மற்றும் மானிட நல்வாழ்வை மையமாகக் கொண்டு அனைவருக்கும் பெறக்கூடியவறான மற்றும் அணுகக்கூடியதாகவும் உள்ளதை கவனத்திற் கொண்டு பிராந்திய மற்றும் தேசிய எல்லைகளில் மேற்கொள்ளப்படுகின்ற உட்கட்டமைப்பையும் உள்ளடங்களாக உயர்தர, நம்பகமான, நிலையான மற்றும் இடர்பாடுகளை தாங்கும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

- தற்போதுள்ள புகையிரத வலையமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் தற்போதுள்ள வலையமைப்பை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்

- மஹவையிலிருந்து ஓமந்தை வரையிலான புகையிரத வீதி புனரமைப்புக் கருத்திட்டம் மற்றும் கொழும்பு புறநகர் புகையிரத வீதிக் கருத்திட்டம் செயல்படுத்துதல்

- இந்தியா கடன் முன்மொழிவுத்திட்டத்தின் கீழ் புகையிரத தொகுதிகளை வலுப்படுத்துவதற்காக புதிய புகையிரத தொகுதிகளைக் கொள்வனவு செய்தல்.
- உள்நாட்டு நிதியங்களின் மூலம் பயணிகள் புகைவண்டிப் பெட்டிகள் புனரமைப்பு மற்றும் புகையிரத தொகுதியின் தொடர்வாரியான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகைள மேற்கொள்ளல்.

- பேருந்துகள் மூலம் வழங்கப்படும் பயணிகள் போக்குவரத்து சேவையின் செயல்திறனை அதிகரிப்பதற்காக, இந்திய கடன் உதவியின் கீழ் 200 பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்துதல்
- பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து புகையிரதத்துக்குள் அணுகல் மற்றும் புறப்படுகை எளிதாக்குவதற்காக புகையிரத மேடைகளை உயர்த்துதல் மற்றும் நீடிக்கும் பணியை மேற்கொள்வது மற்றும் விசேட தேவைப்பாடுகள் உள்ள நபர்களுக்காக அணுகல் வசதிகளை விரிவுபடுத்துதல்.
- பயணிகள் போக்குவரத்து ஒழுங்குமுறை நிறுவனமான தேசிய போக்குவரத்து ஆணைக்குக்குழு செயல்முறை தன்னியக்கப்படுத்தும் கருத்திட்டத்தினுடாக பொதுமக்களுக்கு உடனடி சேவையை வழங்குதல்.
- உலக வங்கி உதவியின் கீழ் புகையிரத நிலையங்களில் மற்றும் பேருந்து டிபோக்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டமொன்று (CERC) செயல்படுத்தப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டில், மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையத்தின் மூலம் தென் பிராந்திய சாலையின் பயணம் செய்யும் மாகும்பர- காலி பேருந்துகளுக்காக முன்கொடுப்பனவு அட்டை முறையொன்றினை அறிமுகப்படுத்துதல்.
- தொலைதூர சேவைகள் புகையிரத மற்றும் பேருந்துகளில் ஆசனங்கள் நிகழ்நிலை முறையில் முன்பதிவு திட்டத்தை தொடங்குதல்.

11 ஆம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

11.2 விசேடமாக இடர்பாடுகளுக்கு ஆளாகும் நிலையிலுள்ள பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், மற்றும் முதியோர் மீது சிறப்பு கவனம் செலுத்தி நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பை மேம்படுத்துதல், பொதுப் போக்குவரத்து முறைமைகள் குறிப்பிடத்தக்க அளவில் விரிவாக்கம் செய்வதன் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் பாதுகாப்பான மலிவு விலையில் பெறக்கூடிய அணுகக்கூடியவாறான மற்றும் நிலைபேறான போக்குவரத்து முறைமையை வழங்குதல்.

- வசதி குறைந்த பகுதிகளில் வாழுகின்ற மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சமூக நலன்புரி பேருந்து சேவைகளாக "சிசுசெரிய", "கெமிசெரிய" மற்றும் "நிசிசெரிய" சேவைகள் வெற்றிகரமாக செயல்படுத்துதல். அதற்கமைய சிசுசேரியா 52

புதிய சேவைகளையும், நிசிசெரியா 25 புதிய சேவைகளையும் 2022 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.சிசுசெரிய மூலம் பாடசாலை சிறார்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொது போக்குவரத்து பேருந்து சேவையை வழங்கி வருவதுடன் செயல்படுத்தப்படுகின்ற மொத்த சிசுசெறிய சேவைகளின் எண்ணிக்கை 1617 ஆகும்.

- நிசிசெரிய சேவை இரவு மற்றும் விடியற் காலை பயணிப் பொது மக்களின் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக செயல்படுத்தப்படுகின்றது. செயல்படுத்தப்படுகின்ற மொத்த சிசுசெறிய சேவைகளின் எண்ணிக்கை 216 ஆகும்.

- 2022 ஆம் ஆண்டில், எரிபொருள் நெருக்கடி ஏற்பட்ட போது, பாடசாலைச் சேவைகள், அலுவலகப் போக்குவரத்துச் சேவைகளை முறையாகப் பராமரித்தல் மற்றும் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தனியார் போக்குவரத்து வழிகளைப் பயன்படுத்துவது கடினமாக இருந்தது. அங்கு, பொதுப் போக்குவரத்து சேவைகளின் அவசியத்தை தெளிவாக உணரப்பட்டது.

- எரிபொருள் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக, மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையம் மற்றும் கொழும்பு கோட்டை பெஸ்தியன் மாவத்தை பேருந்து நிலையத்தில் தற்காலிக எரிபொருள் விநியோக நிலையங்கள் நிறுவப்பட்டு பயணிகளுக்கு தொடர்ச்சியான மற்றும் நம்பகமான பொது பயணிகள் போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- அங்கவீன நபர்களுக்கு புகையிரத பயணங்களில் ஈடுபடுவது சிரமமானாதாக இருப்பதால், அங்கவீன நபர்கள் அணுகக்கூடிய வகையில் புகையிரத மேடைகை நவீனமயமாக்கும் கருத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- கிராமப்புற வீதிகளில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த மாவட்ட செயலக மட்டத்திலும் பிரதேச செயலக மட்டத்திலும் கட்டமைப்பை அமைத்தல்.
- பாதுகாப்பான வாகன அமைப்பை உருவாக்க சாலைத் தகுதிச் சான்றிதழ் வெளியிடும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உதவி வழங்குதல்
- உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய கிராமப்புற சாலைகள் அண்டியதாக விபத்துகள் அதிகம் உள்ள இடங்கள் மற்றும் விபத்து தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்.
- வாகனங்கள் அதிகம் இடம்பெறுகின்ற (Blackspot) இடங்களைக் கண்டறிந்து அது குறித்து பொதுமக்களுக்கு விழிப்பூட்டுவதற்காக பலகைகளை பொருத்துததல்

<u>நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதில் எதிர்கொள்ளும் சவால்கள்</u>

- பாரிய மூலதன கருத்திட்டங்களுக்காக முதலீட்டினை ஏற்படுத்திக் கொள்வதிலுள்ள சிக்கல்கள்
- அபிவிருத்தி முன்னுரிமைகளை அடையாளம் காண்பது நடைமுறை முறையின்படி இடம்பெறாமை
- காணி கையகப்படுத்துதல், உடமை மாற்றம் செய்தல் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகள்
- பணியாளர் பிரச்சனைகள் மற்றும் எதிர்பாராத தொழிற்சங்க நடவடிக்கைகள்
- போக்குவரத்து துறை தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி முடிவுகள் /கண்டறிவுகள், துறையின் மேம்பாட்டிற்காக செயல்முறையில் கையாளும்போது ஏற்படுகின்ற பிரச்சினைகள்
- புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலுள்ள தொழில்நுட்ப சிக்கல்கள்

அத்தியாயம் 06

மனிதவள விபரம்

6.1 ஆளணி எண்ணிக்கை முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி			தற்போதுள்ளபதவியணி			பதவி வெற்றிடம் (அதிகப்படியான)		
	செத்சிறிபாய வளாகம்	மருதானை வளாகம்	மொத்தம்	செத்சிறிபாய வளாகம்	மருதானை வளாகம்	மொத்தம்	செத்சிறிபாய வளாகம்	மருதானை வளாகம்	மொத்தம்
சிரேட்ட	24	15	39	21	09	30	03	06	09
மூன்றாம் நிலை	04	03	07	03	01	04	01	02	03
இரண்டாம் நிலை	96	37	133	135	46	181	-39	-9	-48
ஆரம்பநிலை	54	23	77	40	03	43	14	20	34

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனிதவளங்கள் பாதிக்கின்ற விதம்

அமைச்சின் தூரநோக்கு மற்றும் செயற்பணியினை நிறைவேற்றும் பொருட்டு இலக்காகக் கொண்ட நோக்கங்களை அடையும்போது மனிதவளங்களிலுள்ள பற்றாக்குறை நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஏற்படும் காலத்தினை நீட்டிக்கும் பொருட்டான இயலுமை உண்டு.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு, வேலை வழங்குவதற்கான அரசாங்க வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இரண்டாம் நிலை அலுவலர்கள் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் இந்த அமைச்சுக்கு வெற்றிடங்களிலும் பார்க்க அதிகமாக இணைத்துள்ளது.. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஊழியர்களை திருத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதுடன் மற்றும் மிகை ஊழியர்கள் குறித்து பணியாளர் திருத்தங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மிகை ஊழியர்கள் குறித்த முடிவை அமைச்சு அமல்படுத்தும்.

6.3 மனிதவள அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா) (உள்நாட்டு / வெளிநாட்டு)	நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநா	வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு*

				ட்டு)	
Seminar on party & government for senior officials from Sri Lanka	02	14 நாட்கள்	நிகழ்நிலை முறை	வெளிநாட்டு	
Regional Cooperation Programme 31st Training Course (Online)	03	12 நாட்கள்		வெளிநாட்டு	
Webinar on Smart Transportation	05	01 நாள்		வெளிநாட்டு	
Seventh Session of the Committee on Transport	05	03 நாட்கள்		வெளிநாட்டு	
Fourth Meeting of the BIMSTEC Transport Connectivity working group (BTCWG) 08th December 2022, Thailand	01	01 நாள்		வெளிநாட்டு	
Seminar on Investment & financing management of Railway infrastructure Construction for Developing Countries from 18th to 31st October 2022	04	14 நாட்கள்		வெளிநாட்டு	
Note to all UN member states 6th session of the UNECE working party on public private partnership	01	02 நாட்கள்		வெளிநாட்டு	
Launch programme on UNESCAP training course – fundamentals of freight connectivity & logistics in Asia & the Pacific	01	01 நாள்	நிகழ்நிலை முறை	வெளிநாட்டு	
Regional Cooperation mechanism on low carbon transport – Sub regional consultation & capacity building workshop	01	02 நாட்கள்	24,000.00	வெளிநாட்டு	குறிக்கோள்கள் தொடர்பான அறிவினூடாக அறிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளது.
ஓய்வூதியச் சம்பள செயலமர்வு	04	01 நாள்	16,000.00	உள்நாட்டு	
அலுவலக குறிப்புகளை எழுதுதல் மற்றும் அலுவலக கடிதம் எழுதும் பாடநெறி	42	01 நாள்	10,000.00	உள்நாட்டு	
Transport management programme	04	02 நாட்கள்	30,000.00	உள்நாட்டு	
Invitation to a knowledge session on target for setting for SDG monitoring & evaluation framework for Sri Lanka	04	01 நாள்	நிகழ்நிலை முறை	உள்நாட்டு	
அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்	04	02 நாட்கள்	34,000.00	உள்நாட்டு	
கணக்குப் புத்தகங்களை முறையாகப் பராமரித்தல்	01	02 நாட்கள்	7,500.00	உள்நாட்டு	
லீவு பொறுப்புடைய அலுவலரின் கடமைப் பாங்கு மற்றும் பொறுப்புகள்	42	01 நாள்	10,000.00	உள்நாட்டு	
சேதம் மற்றும் இழப்பு. 104 நிதிப்பிராமாணத்தின் கீழ் சரிபார்த்தல்	02	01 நாள்	10,000.00	உள்நாட்டு	

கணக்கு எழுத்தர்களின் கடமைப் பாங்கு மற்றும் பொறுப்புகள்	02	01 நாள்	10,000.00	**உள்நாட்டு**	
தனிப்பட்ட ஆவணக்கோப்பு முகாமைத்துவம்	08	01 நாள்	17,600.00	**உள்நாட்டு**	
அரசாங்க சேவையில் லீவுகள் மற்றும் சம்பள மாற்றங்கள் குறித்த பட்டறைகள்	50	01 நாள்	22,000.00	**உள்நாட்டு**	
தமிழ் மொழி பயிற்சி திட்டம்	33	150 மணி	86,250.00	**உள்நாட்டு**	
நடைமுறை பொருளாதாரம் பற்றிய முதுகலை பட்டப்படிப்பு	01	01 வருடம்	12,900.00	**உள்நாட்டு**	
கொள்முதல் பட்டறை	40	03 மணி	-	**உள்நாட்டு**	
தகவல் தொழில்நுட்பத்தின் நடைமுறை பயன்பாடு	40	03 மணி	-	**உள்நாட்டு**	
இழப்பீடு மற்றும் கொடுப்பனவுகள்	40	02 மணி	-	**உள்நாட்டு**	
மொத்த முதலீடு			290,250.00		

***நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கின்ற* விதம்**

அமைச்சின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள்ச மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் அமைச்சிற்குள் அவர்களுக்குரிய கடமைகள் மிகவும் திருத்தமான முறையிலும் வினைத்திறன் வாய்ந்த முறையிலும் மேற்கொள்வதற்கு இயலுமை கிடைத்துள்ளது. மேலும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் பெறுகின்ற அனுபவங்கள் அவர்களது கடமைகளில் ஈடுபடும் போது பிரயோகித்துக் கொள்வதற்கும் மற்றும் அதன்மூலம் வினைத்திறன் மேம்படுத்துவதும் இடம்பெறுகின்றது. அதேபோன்று வெளிநாட்டுப் பயிற்சிகள் கிடைப்பதன் மூலம் அலுவலர்களுக்குள் தன்முனைப்பாற்றல் இடம்பெறுவதுடன், அதனூடாக பெற்றுக்கொள்ளப்படும் அறிவு மற்றும் திறமைகளைப் பயன்படுத்தி போக்குவரத்துதுறையில அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு இயலுமைக்கிடைத்துள்ளது. (அதனுடன் தொடர்புடைய சான்றிதழ்கள் மற்றும் அறிக்கைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.)

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டுநிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அது பற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	**பின்வரும் நிதிஅறிக்கைகள்/கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரசு அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	இணக்கமற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	இணக்கமற்றது		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	இணக்கமற்றது		
1.6	ஏனைய	இணக்கமற்றது		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி. 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும்(CIGAS) தயார்செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA – 20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		

3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது	இணக்கமானது		
3.4	2014.05.11 திகதிய அரசு கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 கொண்ட அரசு ஊதியமென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
4	வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை வ.செ.தி. திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
5	கணக்காய்வு வினாக்கள்			
5.1	அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6	உள்ளகக் கண்காய்வு			
6.1	நி.பி. 134 (2) DMA/1-2019படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	*இணக்கமற்றது*		நினைவூட்டல்களை அனுப்புதல் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில் சம்பந்தப்பட்ட கிளைத் தலைவர்களை விழிப்பூட்டல்
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துனைப்பிரவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
6.4	நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குதல்	இணக்கமானது		
7	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு			
7.1	DMA 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்த்து 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	*இணக்கமற்றது*		இராஜாங்க அமைச்சின் நோக்கெல்லை அவ்வப்போது ஏற்பட்ட

				மாற்றங்களினால் ஏற்பட்ட நிலைமையே இதற்குக் காரணம்.
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	இல. 01/2017 கொண்ட ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்திக்கமைய சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி அந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை செயல்படுத்துவதனை ஒருங்கிணைப்பதற்கான பொருத்தமான தொடர்பாடல் அதிகாரியொருவரை நியமித்து அந்த அதிகாரி தொடர்பான தகவல்கள் கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்குஅனுப்பப்பட்டிருத்தல்	இணக்கமானது		
8.3	அரசு நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன்படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		
9	வாகன முகாமைத்துவம்			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளை தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் தொடர்பாக நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதலவேண்டும்	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமானது		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		
10	வங்கி கணக்குகளின் முகாமை			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து மு.கொ.வ.	இணக்கமானது		

	மற்றும் செயற்படாத வங்கிக் கணக்குகளனைத் தீர்த்தல்			
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீராக்கம் செய்ய வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் செயலாற்றி அந்த நிலுவைகள் ஒரு மாதத்திற்குள் தீர்த்திருத்தல்	இணக்கமானது		
11	நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94(1) இன் படி ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டினால் பயன்படுத்தியதன் பின்னர் வருட இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு வரம்பை மீறாதவாறு பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணக்கமானது		
12	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல	*இணக்கமற்றது*		நீதித்துறை நடவடிக்கை எடுப்பது மற்றும் கடனை செலுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எழுத்துப்பூர்வமாக அறிவித்தல்
13	பொதுவைப்புக்கணக்கு			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	கட்டுநிதிக் கணக்கு			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		நெடுஞ்சாலை அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும்.
14.2	நி.பி. 371 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட தற்செயலான இடைக்கால கட்டுநிதி அத்தகைய பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாதவாறு தற்காலிக இடைக்கால கட்டுநிதி வெளியிடுதல்	இணக்கமானது		
14.4	கட்டுநிதி கணக்கின் நிலுவை திறைசேரி	இணக்கமானது		நெடுஞ்சாலை

	புத்தகங்களுடன் மாதந்தோறும் கணக்கிணக்கம் செய்தல்			அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும்.
15	வருமானகணக்கு			
15.1	ஏற்புடைய ஒழுங்குவிதிகளின்படி திரட்டப்பட்ட வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தியிருத்தல்	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்டிருந்த வருமானம் வைப்புக் கணக்கில் வரவுவைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	இணக்கமானது		
15.3	நி.பி. 176 இற்கமைய நிலுவை வருமான அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
16	மனிதவள முகாமைத்துவம்			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின்எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	20.09.2017 திகதிய எம்.எஸ்.டி.. சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
17	பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் ஆவணமொன்று இற்றைப்படுத்தி பேணுதல்.	இணக்கமானது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்களை அதன் இணையத்தளத்தின் ஊடாக வழங்கப்பட்டிருப்பதுடன், இணையத்தளத்தினாடாக அல்லது மாற்றுவழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள் / குற்றச்சாட்டுகளை வெளியிடுவதற்கு வசதிகளை ஏற்பாடு செய்தல்.	*இணக்கமற்றது*		2022 ஆம் ஆண்டில், போக்குவரத்து விடயத்துக்காக அமைச்சரவை மற்றும் இராஜாங்க என இரண்டு அமைச்சுகள் இருந்ததுடன், அமைச்சரவை அமைச்சின் மூலம் இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் செயலில் உள்ள இணையதளம் பேணப்பட்டது. ஆயினும், தற்போது அமைச்சரவை அமைச்சு மட்டுமே உள்ளது. எனவே இந்த தேவையை பூர்த்தி செய்வதற்காக தனி இணையதளத்தை பராமரிக்க வேண்டிய அவசியம்

				இல்லை
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின்படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	இணக்கமானது		
18	**பிரஜைகள் பட்டயத்தினைச் செயற்படுத்துதல்**			
18.1	இல. 5/2008 மற்றும் 5 /2018 (1) இன் படி பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரஜைகள் பட்டயம் / பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்	*இணக்கமற்றது*		இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன
18.2	அக்குறித்த சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொருத்தவரை, பிரஜைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடுசெய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமானது		
19	**மனிதவள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனிதவளத்திட்டம் தயாரித்திருத்தல்	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு இருப்பதை மேற்கண்ட மனிதவள திட்டத்திற்குள் உறுதி செய்யப்பட்டிருத்தல்	இணக்கமானது		
19.3	மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	இணக்கமானது		
19.4	மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத்திட்டம், திறன் மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்துதல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒருமுத்த அதிகாரி நியமித்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பதில்வினைக் காட்டுதல்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	*இணக்கமற்றது*		